
# கல்கி

ஆசிரியர்

25-12-66



# கேள்வி--பதில்!

1. காங்கிரசின் அழுக்கைப் போக்கவேண்டும் என்று சஞ்சீவ ரெட்டி பேசி இருப்பது எதைக் காட்டுகிறது?

1962-ம் ஆண்டுத் தொடக்கத்தில், அதாவது பொதுத் தேர்தலுக்கு முன்னதாகக் காங்கிரசில் சுயநலவாதிகளும், பதவிப் பித்தர்களும் நிறைந்து விட்டார்கள் என்று பேசியது நினைவிருக்கிறதல்லவா! இன்னும் இரண்டு திங்களில் அடுத்த பொதுத் தேர்தலும் வரப்போகிறது! தேர்தல்களுக்கு முன்பாக ஏன் இப்படிப் பேசுகிறார் என்பதைவிட, முன்பு பேசியதற்கும் இப்போது பேசியதற்கும் உள்ள தொடர்பை மட்டும் ஒப்பிட்டுப் பார்த்தால், இப்போது அழுக்கு அகற்றப்பட வேண்டும் என்றும், தூய்மைப் படுத்தப்பட வேண்டும் என்றும், காங்கிரஸ் எதிர்க் கட்சியாக இருந்தால் நல்லது என்றும் கூறுவது, முன்பு கூறியதுபோல, சுயநலவாதிகளும், பதவிப் பித்தர்களும் சூழ்ந்து, குப்பையாகவும், கூளமாகவும் ஆன நிலைமைத் தூய்மைப்படுத்தப்பட வேண்டுமானால், அது எதிர்க்கட்சியானால் தான முடியும் என்று அவர் நம்புவதாகத் தெரிகிறது! அவர் உள்ளம் உணர்ந்த உண்மையை ஊருக்குரைத்து விட்டார்! உணர்ந்துகொள்ள வேண்டியது உங்கள் கடன்! செயல்பட வேண்டியது உங்கள் பொறுப்பு!

2. அடுத்த ஆண்டில் ஒரு கோடி டன் அரிசி ஏற்றுமதி செய்ய முடியும் என்கிறாரே அமைச்சர் சுப்பிரமணியம், முடியுமா?

முடிந்தால் நல்லது தான்! முடியும் என்பதற்குச் சான்று என்ன காட்டுகிறார்! உணவு இறக்குமதி கூடாது என்று இருந்த டண்டி தரே, பாதை தவறிப் போய் விட்ட பின்னரும், பட்டினிச் சாவுகளின் எண்ணிக்கைத் பட்டியல்கள் வரத் தொடங்கி விட்ட பின்னரும், பீகார், ஒரிசா பஞ்சத்துக்கு அப்புறமும், அமெரிக்காவும் ரஷ்யாவும் கைவிரித்துக் காட்டியதற்குப் பிறகு ஏற்றுமதி செய்ய முடியும் என்பதற்கான திட்டம் என்ன காட்டுகிறார்? ஒருகால் கோபி வட்டாரத்து மக்களுக்குத் தித்திப்பு வழங்குவதான பேச்சாக இது இருக்கலாம். தமிழ் நாடு அல்லது இந்தியாவைப்பொறுத்த மட்டில் இதுவரை காங்கிரஸ் அரசு கூறிவந்துள்ள பல்சுவைப் பேச்சுக்களைப் போன்றதே இதுவும்!

3. சேலத்துக்குப் பாதாள சாக்கடைத் திட்டம் பற்றி அரசு பரிசீலிக்கும் என்று தமிழக முதல்வர் கூறி இருப்பதைக் கவனித்தீர்களா?

ஆமாம்! தேர்தல் வந்துவிட்டது, வாக்காளர்களே விழித்தெழுங்கள்! வாக்குறுதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி இருக்கிறார்! காங்கிரஸ் இதுவரை செய்யாததை இப்போதாவது பரிசீலிக்கும் என்கிறாரே, அதுவரையில் நல்லதுதானே!

4. தாலூகா தலைநகர் தோறும் புதிய மருத்துவ மனைகள் கட்டப்படும் என்கிறாரே முதலமைச்சர் பக்தவத்சலம்?

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் தானே சொல்லி இருக்கிறார்! விருதுநகர் தொகுதியைப் பற்றி கொஞ்சம் நினைவுப்படுத்துங்கள் அவருக்கு!

6. 1966-ல் மட்டும் இவ்வளவு பயங்கர மழையும் புயலும் ஏற்படுவானேன்?

தமிழ் நாட்டில் அல்லது இந்தியாவில் மட்டுமல்ல, ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளில் பெரும்பான்மையும் இப்படி யேற்பட்டிருக்கிறது என்றும், இதற்கு சூரியனில் ஏற்பட்டுள்ள ஒருவித மாற்றமே காரணம் என்றும் ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டறிந்து கூறியுள்ளனர். 1966-இறுதியுடன், சூரியனின் இந்த மாற்றம் முடிவுறும் என்றும் அவர்கள் நம்புகின்றனர்!

6. அழகிரீடா வியட்நாம் செல்வது பற்றி அமெரிக்காதவிர, பிற நாடுகள் என்ன நினைக்கும்?

என்ன நினைக்கும்! இந்திய அரசியலை, இந்திய மக்கள் இந்த அளவுக்கு மதிக்கும் நிலையிலா ஆட்சி இருக்கிறது என்று நினைத்துக் கொள்ளும்!

7. ரொடீஷிய விவகாரம், ஐ நா. வால் தீர்க்கப்படுமா?

எப்படி முடியும்? எண்ணெய் முடக்கம் போன்று, பொருளாதாரத் துறையில் எத்தகைய முடக்கத்தை யேற்படுத்தினாலும் தெ. ஆப்பிரிக்காவும், இன்னும் சில நாடுகளும் ரொடீஷியாவின் பக்கம் சாய்ந்து இருக்கிறதே! முதலில் அவற்றை முடக்கி விட்டாலல்லவா ரொடீஷியா முடங்கும்!

8. சென்னை பொது மாநாட்டில் எனக்கென்ன பொறுப்புத் தருகிறீர்கள்?

நீங்களும், உங்களைச் சார்ந்தவர்களும், சுற்றார் உறவினர், சுற்றம் புடை சூழ வந்திருந்து கருத்து விருந்தருந்தி, கண்டதையும் கேட்டதையும் மற்றவர்க்கும் எடுத்துக் கூறி கழகத்தின் வெற்றிக்குப் பாடுபட வேண்டும் என்பதைக் காட்டிலும் ஒரு பொறுப்பு இருக்கிறதா, என்ன?

9. இந்திய நாட்டு எதிர்க்கட்சிகளை சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் உவமை காட்டித் தலைமையமைச்சர் இந்திராகாந்தி பேசி இருப்பது எதைக் குறிக்கிறது?

தலைமை யமைச்சர் ஜனநாயக உணர்வில் ஊறித் திளைத்திருக்கும் தன்மையைப் புலப்படுத்துகிறது. சீன-பாக். பகை தடுக்க நாடு திரண்டதுபோல, காங்கிரசை ஆதரிக்கவும் அணி திரள வேண்டும் என்கிறார். நாட்டு அரசியலை இவ்வளவு சிறுமையுடையதாக அவர் எண்ணிக்கொண்டிருப்பது துரதிருஷ்டமாகும்! அத்துடன் எதிரி நாட்டோடு, எதிர்க் கட்சிகளை இணைத்துப் பேசும் துணிவும் வருந்தத் தக்கதுதான்!

O

---

## விற்பனையாளர்களுக்கு

"காஞ்சி" விற்பனையாளர்கள் அனைவருக்கும் டிசம்பர் மாதப் பில் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் தொகை தவறாமல் அனுப்பவேண்டுவதுடன், பாக்கியுள்ள விற்பனையாளர்கள், தங்கள் பாக்கியையும் சேர்த்து அனுப்பக் கோருகிறோம். மிகுந்த பாக்கியுள்ளவர்களுக்கு நிச்சயம் இதழ்கள் நிறுத்தப்படும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்
'காஞ்சி'

---

**காலமிது, காலமிது....!**

இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டா லென்ன என்று ஒதுங்கி இருக்க இது இதிகாச காலமல்ல! தம் விதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் நிலையிலிருக்கி ரோம் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டிய காலம்.

# காஞ்சி

மலர் 3 25—12—66 இதழ் 22

## எழுந்தது சேனை என்றே!.....

**நீலமா மணிச் சிவிகை வெள்ளமும்**
**நித்திலக் குலக் கவிகை வெள்ளமும்**
**காலினல் வரும் யமுனை வெள்ளமும்**
**கங்கை வெள்ளமும் காண்மின் என்னவே!**

ஈதென்ன! வன்புயலும் தீமழையும் வெள்ளக் காடென தமிழகத்தில், பூம்பாதம் பாவித்து புன்மை பல விளை வித்த — மறக்க முயன்றுகொண்டிருக்கும் காட்சியை மீண்டும் யமுனை வெள்ளத்தையும், கங்கை வெள்ளத் தையும் கூறி, மனக்கண்ணுக்கு ஒரு மருட்சி காட்டப் படுகிறதே என்று கலங்கத் தேவையில்லை!

பரணிபாடி, பொற்றேங்காயும் பொற்கழஞ்சும் பரிசில் பெற்ற பாவலனும் செயங்கொண்டார், சோழன் குலோத்துங்கன் செருகளம் செல்லும் காட் சியை, இப்படிப் பாடிக் காட்டுகிறார்!

விண்ணுக்குத் திரையோ! என வீரர் வரிசைகள் வியப்படைதல்போலே இருவண்ணக் கொடியோடு வீறார்ந்த நடையிட்டு தமிழகத் தலைநகரில் வருகிற 29, 30, 31-லும் ஜனவரி 1-லும் பொதுமாநாட்டில்; கூடவிருக்கின்ற கோலாகல காட்சியோடு, செயங் கொண்டாரின் கற்பனையை ஒப்பிட்டுப் பாருங்கள்!

யமுனையும், கங்கையும் நடையிடத் தொடங்கி னல்!....,கற்பனை எப்படி நெஞ்சை நெக்குருகச் செய் கிறது! கழகத் தோழர்கள் தம் குடும்பத்தோடும், உற்றார் உறவோடும் விழா காணவரும் வீர வரலாற் றைச் சித்திரிக்க இதனினும் வேறு இன்சொல் உண்டோ! யமுனை வெள்ளமும் கங்கை வெள்ள மும்! சென்னை-விருகம்பாக்கத்தில்!

**தொடைகள், கந்தரம்; புடைகொள் கொங்கை கண்;**
**சோதிவாள்முகம்; கோதை ஓதி, மென்**
**நடைகள், மென்சொல் என்றுடைய ஒப்பிலா**
**நகைமணிக் கொடித் தொகை பரக்கவே!**

போர் வீரர்கள் இசை இலக்கணத்தோடு சந்த நடை யிடல்போலே, பாடலும் நம்மை நடைபயிலச் செய் கிறதல்லவா!

இம்மாதிரி செம்மாந்த நடையிட்டு, மாநாட்டின் தொடக்கமாக முதல்நாள் புழுதி கிளம்பிச் செல்லும் பெரும்படைபோல், கழக வீரர்களின் ஊர்வல மாட் சியை, வீதியின் மருங்கே நின்று வெற்றிக் களிப் போடு, வாழ்த்துரை வழங்க வழியெலாம் நிற்பராம்! எப்படி? புடைகொள் கொங்கை! கண்ஜோதி! வாள் முகம்! காட்டி!! அம்மம்மா!

இந்த இதழின் ஆசிரியர் அறிஞர் அண்ணு அவர்கள், இந்த மாநாட்டில் கழகச்சார்பில் பொதுத்தேர்தலிலே போட்டியிடப்போகிற வேட்பாளர் பட்டியலை வெளி யிடவிருக்கின்றார்கள்! கழகத்தின் தேர்தல் அறிக்கை யும் அங்கே அறிவிக்கப்படும்! எல்லா தலைவர்களும், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் கருத் துரையாற்றவிருக்கிறார்கள்.

அது கேட்க,

**கடல் கலக்கல்கொல்! மலை இடித்தல்கொல்!**
**கடுவிடப் பொறிப் பண பணிப்**
**பிடர் ஒடித்தல்கொல்! படை நினைப்பென**
**பிரளயத் தினில் திரளவே!**

என்றார்போல், ஊழி விளைக்கும் ஆழ் கடல்தான் கலங்கியதோ? கரவொலி கேட்டு மலைகள் இடிந்துத் தரைமட்டமாகின்றதோ! விடப்பாம்பு அழித்தல் அன்ன, வீணராட்சியின் மிடர்பற்றி ஒடித்தலோ! என்ற ஐயப்பாட்டை ஆக்கித் தருமாறு போல படை கள் நாம்! காங்கிரசின் சர்வாதிகார வெறித்தனத்தை யும், ஏகபோக ஆதிக்கத்தையும் வீழ்த்தி முறியடிக்க வீறுகொண்டுக் கூடியுள்ள வீரர்படை வரிசை நாம்!! என்ற நினைவோடு திரண்டாகவேண்டும்.

நாம் எதெதனைச் செய்கிறோமோ, அதே போல் செய்து பார்த்து, எங்கெங்கு செல்கிறோமோ அங்கெல் லாம் சென்று பார்த்து தங்கள் ஏமாற்றத்தையும் எரிச்சலையும் கடுஞ் சொல் கொண்டு கொட்டித் தீர்க் கும் காங்கிரசார்—

**உறுவ தென்கொல்! என நிலைகுலைந்து அரசர்**
**உயிர் நடுங்க, ஒளிர் பவளவாய்**
**முறுவல் கொண்ட பொருள் அறிகிலம்! சிறிதும்**
**முனிவு கொண்ட திலை வதனமே!**

என்று, முகத்திலே முனிவு இல்லை! கண்ணே ஒளிர் கிறது! அதரம் புன்னகை பூத்துளதே! விளைவு என் னவோ! வீழ்ச்சி திண்ணமோ உறுவ தென்னமோ! என் நிலை குலைந்து நடுங்கும்படியான காட்சியைப்


நீங்கள் படிக்கிறீர்களா! ஆங்கில வார ஏடு!!

HOME RULE

Hony. Editor C. N. ANNADURAI M.A. M.P.

விவரங்களுக்கு:

நிர்வாகி, 'ஹோம் ரூல்'

அன்பகம், :: சென்னை-18

படைக்கின்ற பெரும் பொறுப்புக்கு கழகத்தோழர்கள் ஆளாகி இருக்கின்றனர்.

தமிழகத்தின் பெரும்பான்மையான மாவட்டங்களில், கூடி காங்கிரசின் ஏகபோக ஆதிக்கம் வீழ்த்தப்படவேண்டியதன் அவசர அவசியத்தையும், பாழ்படுத்தப்பட்டுவிட்ட தமிழகத்தின் தாழ்வகற்றித் தீரவேண்டியதன் காரணம் பற்றியும் உணவுக்கும், உடைக்கும், உயிருக்கும்கூட பாதுகாப்பில்லாத இழிநிலைபற்றியும் இது போக்கக் கழகத் தோழர்களின் கடமை பற்றியெல்லாம் நினைவுறுத்தப்பட்டுள்ளது.

காங்கிரசாரின் கேடுபாடுகள் பற்றி இனி எழுதவும், பேசவும் வேண்டிய கட்டத்தைக் கடந்து, செயல்படவேண்டிய நிலைமையை எட்டியாகிவிட்டது. இருக்கின்ற நாட்களோ மிக மிகக் குறைவு.

தங்கள் ஆதிக்கத்தைக் காப்பாற்றிக்கொள்ளும், நினைப்பில் மக்களை, பக்குவமடையாதவர்கள் என்ற மமதை எண்ணத்தில் பலப் பல வாக்குறுதிகளை ஆளவந்தோர் வழங்கத் தலைப்பட்டுவிட்ட வேளை இது!

இப்படிப்பட்ட வேளையில் கழகப் பொதுமாநாடு கூட விருக்கிறது. அரிய டல கருத்துரைகளை வழங்கவும், கடமைகளையும் செயல் முறைமைகளையும் தெளிவுபடுத்திக் காட்டவுமிருக்கின்ற மாநாடு.

தோழர்கள் ஒவ்வொருவரது நெஞ்சிலும் நீங்கா இடம் பற்றிக்கொண்ட நீலமேகம் அவர்களின் பெயரை, கூடவிருக்கும் இடத்துக்குச் சூடி பெருமைப்படுத்தியும், பெருமைப்பட்டு மிருக்கிறது கழகம். கூடி அமர்ந்து கொள்கை விளக்கம் கேட்கவிருக்கின்ற பந்தலுக்குப் போளூரார் பந்தலென்று பெயர் பொறித்து கண்ணியம் காக்கப்பட்டுள்ளது.

கலைக் கண்காட்சியும், ஓவியக் கண்காட்சியும் தோழர்களுக்குப் புதிய புதிய எழுச்சியைத் தோற்றுவிக்க வல்லன! வரவேற்பு வளைவுகள் நகரையே எழில் கோலம் பூக்கச் செய்யுமாறு ஒவ்வொன்றும் தியாகிகளின் வீரக் கல்லாக நின்று தத்தம் தியாகத்தை நினைவுறுத்தி — கடமையை முன்னிறுத்தச் செய்யும் தூண்களாகும்!

**எல்லாவற்றுக்கு மேலாக, அறிஞர் அண்ணு அவர்கள் இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்க இருக்கிறுர்கள்.**

கழகப் பொருளாளர் கருணுநிதி அவர்கள் மாநாட்டைத் திறந்து வைக்கவும்,

காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள், கொடியேற்றி வைக்கவும்,

ஏ. கோவிந்தசாமி அவர்கள் கலைக் கண்காட்சியைத் திறந்துவைக்கவும்,

சி. பி. சி. அவர்கள் தியாகிகளது படங்களைத் திறந்து வைக்கவும் இருக்கிறுர்கள்.

நாவலர் அவர்களது பொறுப்பில் சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அனைவரையும் வரவேற்க கரம் நீட்டிக் காத்திருக்கிறுர்.

மொத்தத்தில் கழகப் பொது மாநாடு, மாநாடு என்னும் நிலைக்கு அப்பாற்பட்ட ஒருகலைவிழாவாகவே நடைபெறவிருக்கிறது; புதிய புதிய நாடகங்கள்! கலை நிகழ்ச்சிகள்! எனவே,

**எழுந்தது சேனை! எழலும்**
**இரிந்தது பாரின் முதுகு!**
**விழுந்தன காநும் மலையும்!**
**வெறுந்தரை ஆன திசைகள்!**

இப்படிப் பகை முடிக்கும் பாடி வீட்டுக்கு வரவிருக்கின்ற தோழர்களின் சேனை வரிசையைச் சுமக்க முடியாமல் பாரின் அச்சு முறிந்தது! காடும் மலையும் விழுந்தன! எண்டிசையும் வெறுந்தரையாய் வெளமயங்கின என்று கூறிப் பெருமிதம் கொள்ளும் அளவுக்கு

**அதிர்ந்தன நாலு திசைகள்!**
**அடங்கின ஏழு கடல்கள்!**
**பிதிர்ந்தன மூரி மலைகள்!**
**பிறந்தது தூளி படலம்!**

என்றுங்கு மாற்றுரும் மருண்டு கூறும் பெற்றிமையை தோழர்கள் பெற்றுத் தரவேண்டும்! தருவார்கள் என்ற நல்ல நம்பிக்கையுடனேயே வாரீர்! வாரீர்! தலைநகர் நோக்கி வெள்ளமென வாரீர்! என்று அன்பழைப்பு விடுக்கிறோம்!

o

—சீயேயெம்.

ஏஜண்டுகள் தேவை

# மலையாள வைத்தியசாலை

"கிஸ்கோ" (ஜில்லா ஏஜண்ட்) மலையாள பார்மஸியில் தயாராகும் பவர்கூடிய ஆசவ அரிஷ்டங்கள் விற்பனை செய்ய எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

எங்களது ஏஜண்டுகள்:

K. M. சாகுல்ஹமீது, 95, அபிபுல்லாரோடு, சென்னை-17
N. K. C. சண்முகம் அண் கோ.,
அங்காளம்மன் கோயில் தெரு, கோயம்புத்தூர்-1
K. M. சம்சுதீன், 28, கிருஷ்ணுபுரம், மதுரை,
R. M. A. கோபால் அண் பிரதர்ஸ்
ரெங்கராஜா தியேட்டர் சமீபம், பழனி.
N. மகாசாமி,
விசாலாட்சி தியேட்டர் சமீபம், தாராபுரம்.
N. சாகுல் அமீது, மெயின்ரோடு, பார்த்திபனூர்.
S. கந்தசாமி, என். கோவில்பட்டி, நத்தம்.
D. ரெங்கநாதன், நல்லமநாய்க்கன்பட்டி, தாராபுரம்.
K. சாகுல்ஹமீது, டர்னபுரம், கொடைக்கானல்.
இராஜகோபால், கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு அருகில்
சண்முக முதலியார், ஒட்டன்சத்திரம். [மணப்பாறை.


உடனே விண்ணப்பிக்க:

State Sole Agent: சுலைமான்
மலையாள வைத்தியசாலை,
நெ. 145, R. S. ரோடு, :: திண்டுக்கல்-3

# தம்பி

61 ன ஒரே மகிழ்ச்சி, கொந்தளிப்பு அளவுக்குக் களிப்பு! முகத்திலே ஓர் புதுப பொலிவு! இதயத்திலோ ஓர் கனிவு! நடையிலேயே ஓர் முடுக்கு! என்ன காரணம்? புரிகிறது தம்பி! புரிகிறது! மாநில மாநாட்டுக்குப் புறப்படும் ஏற்பாடு உனக்கோர் புதுத்தெம்பைக் கொடுத்திருக்கிறது. கழகத்தவர் இலட்சக் கணக்கில் திரண்டிடும் பொன்னாள்; அன்று நாட்டிற்கான ஓர் பொற்காலம் காண விழைவோரெல்லாம் கூடுகின்றனர். உரை கேட்டு மகிழவும் உணர்ச்சியினை ஊட்டவும். உவகை பெறவும் தரவும் கூடுகின்றனர். கழகம் பெற்றுள்ள வளர்ச்சியின் உயிரோவியம் அலை அலையாய் உடன்பிறப்புகளின் ... கழகத் தோழர்களின் உறுதியை அவர்களின் ஒளிவிடு கண்கள் காட்டுவனவாகும்! பட்டுக்கோட்டையாரா? பெரும்பண்ணையூராரா, அதோ மாயவரத்தார், அவர் மன்னார்குடி ... லாப்பூராருடன் வருகின்றனரே அவர் காயல் பட்டினம், எதிர்பார்த்தபடி ...ருகூர் ... நண்பர், கோவைக் குமரர்கள் நேற்றே வந்துவிட்டார்கள், காஞ்சி புத்தூர் ... பூரர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பே வந்துவிட்டனர், காவேரிப்பாக்கத்தார் கருங்குழி கத்தார் கருந் ... யின் தோழர் வாணியம்பாடி ... தோழர்கள், ... டார், பெரிய அதோ காரைக் மதுரைத் தோழ ... யார், கலசபாக் தட்டாங்குடி தஞ்சைப் பகுதிகள், வேலூரார் யார், சிதம்பரத்தார்கள், சீர்காழித் தோழர் ... ஊரணி பாளையத்தார், குடியார் வடருடன், மறவர் கோட்டத்து ... பணிகள் பற் ... லர், மதுரையம்பதியின் மாவீரர் அணி அணியாய், கருநாடகப் பகுதிவாழ் கடமை வீரர்கள், ஆந்திர மாநிலத்து அருமைத் தோழர்கள், பண்ணைக்காட்டார் பாபநாசத்தார், குத்தாலத்தார், குடவாசல தோழர்கள், குடந்தை தந்திட்ட குணக்குன்று, நெல்லை ... பாகுபாம், திருச்சி தீரர்கள், தஞ்சாவூர் தோழர்கள், உடுமலைவாழ் அன்பர், பொள்ளாச்சித் தோழர்கள், ஈரோடு நகரத்துத் தோழர்கள், உவகை தரும் முகவை மாவட்டத் தோழர்கள், அணி அணியாய் வருகின்றனர், அழகு தருகின்றனர், குடும்பம் குடும்பமாகக் கூடுகின்றனர் குதூகலமாக, காண்கின்றாயே பெண்ணே! இன்றென்ன கூறுகின்றாய்? கழகம் கழகமென்று கூவிக்கிடக்கிறீரே, கழகம் என்னதான் சொக்குப்பொடி போட்டதுவோ? என்றெல்லாம் கேட்டாயே, எழிலரசி! காண இன்று! இதுதான் என் கழகம்! இவரெல்லாம் என் குடும்பம்! இவர் கூடும் இடம் எனக்கு, திரு இடம், தீரர் இடம்! பெருமகிழ்ச்சி எல்லையற்றுள்ள இதற்கீடு இல்லையன்றோ! வாழ்வளிக்கக் கூடுகின்றனர், வன்கணாளர் கெட்டமடக்குவார், கோல் கொண்ட காரணத்தால் கொடுமை உமிழ்ந்தலையும் கூட்டத்தை விரட்டிடுவார், அவர் பெற்ற உறுதியின் அடிப்படை அறிவாயோ? தன்னலம் மறுத்திட்ட தக்கோரின் உழைப்பேதான்! தன்னைத்தான் ஒப்படைத்த தகுதிமிக்கோரின் அறிவாற்றல்; தொண்டு! கூடுகின்றோம் இன்று இங்கு, கொடி பறக்கக் காண்கின்றோம், முரசொலி கேட்கின்றோம் என்றால், பெருமையே! இந்த நிலை நாம் பெற்றிடவே, எத்தனையோ தோழர்கள் கொட்டினர் குருதியினை. கொடுங்கோலர்களின் காயல், டமி தாக்கியபோதும் பதறுமல

## செந்தமிழே! வா!



# நாட்டின் அணிகலனே! நல்ல திறத்தோனே!

களம் நின்று, என் கழகம்! என் குடும்பம்! என்று கூறி நின்றார், ஏற்றார் எதிர்ப்புகளை, அவர் கண்ட தொல்லைக்கோர் அளவே கிடையாது! ஆண்டை எதிர்த்திருப்பார், அடிஆள் எதிர்த்திருப்பான்; வேலை இழந்திருப்பார் வேதனையில் உழன்றிருப்பார், என்றாலும் எப்போதும், எது வந்திடினும் அஞ்சிடப் போவதில்லை, நெஞ்சத்துக் குடிகொண்ட உண்மைக்கே பணிந்திடுவேன் என்றுரைத்தது என் கழகம்! என் குடும்பம்! எனக்கூறிக் களம் நின்றார். எண்ணற்றவர் என் உடன்பிறந்தார்! இதோ! இதோ எங்கும்! காணடி என் உள்ளம் வென்றவளே! காட்சி இதுபோலக் கண்டதுண்டோ கூறிடுவாய். அங்கே உலவுகின்ற அறிவரசன் அறிவாயா? அகமும் புறமும் கற்ற அருந்தமிழ்ப் புலவரவர்! ஊரின் கோடியில் உள்ளதோர் சிறு குடிலில் வாழ்கின்றார், அவர் திறனோ, நாட்டிற்கே நல்லதோர் அணிகலனாம்! நம் தமிழர் வாழ்ந்தவிதம், நடுவில வந்துற்ற நலிவு. அதன் காரணம், இன்று நாம் பெற்றுள்ள விழிப்புணர்ச்சி. அதன் விளைவு, இத்தனையும் கூறிடுவார், தித்திக்கும் செந்தமிழில். அதோ காண்பாய், அவர்தான் எழுத்துலகு தன்னில் ஏற்றமிகு இடத்தைத் தனக்கெனப் பெற்றிட்ட பேரறிவாளன். முத்தமிழை அவர் வடித்துத் தந்திடுவார், பருகிடுவோர் பெற்றிடுவார் தனிச்சுவையை. உள்ளத்துப் பாங்குகளை உன்னதமாய் காட்டவல்லார். உயர உயரச் சென்றேன், என்று உரைத்திடும் பணந்தேடிப் புலவரெல்லாம், ஊர் பகைக்கும் என்றஞ்சி உண்மையினை உணர்த்திடாமல் ஒதுங்கி நின்ற காலத்தில் உச்சி பிளந்திடினும் ஊராள்வோர் பகைத்திடினும், மெச்சிப் புகழ்ந்திடவே வாரார் எவரும் என்று எச்சரிக்கை விளப்பிடினும், இல்லம் இழந்திடினும் இன்னுயிரே போகுமென்ற நிலையே உறுத்திடினும், உண்மையின் பக்கம் உறுதியுடன் நான் நிற்பேன், உலகு உணருமட்டும் உரைத்தபடி இருப்பேன், என்று கூறி நின்றார், பழந்தமிழர் பண்புக்கோர் எடுத்துக்காட்டாய்! கலகலப்பு அதிகமாகக் காணுதே, காண்கின்றாய்! காரணம் அறிவாயோ! கலை உலகில் நிலையான புகழ்பெற்ற தோழரவர், கழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் உள்ளார்; சீர்த்தமிகு கலைத்திறனால் நாட்டார் நெஞ்சத்தில் இடம் பெற்றார்; புகழ்மணக்க வாழ்கின்றார். ஆயின் பூந்தோட்டம், இசைகளியாட்டம் பொற்குவியல் என்டனவற்றில் இல்லை இன்பம், புன்னகை பூத்த முகத்தோடு என் தோழர் நின்று வாழ்க! வாழ்க! என்று எழுப்பிடும் வாழ்த்தொலியே இசையாகும் என்ற கருத்துடையார். இளஞாயிறுகள்! எழு ஞாயிறுகள்! எல்லோரும் என் தோழர்! விலை ஏறிவிட்டதனால் வேதனையுறுகின்றார், வேண்டாம் விபரீதம், விளைவு நல்லதல்ல என்று ஆண்டிடும் பெரியோர்க்கு அறிவுரை கூறியதால், அடைபட்டார் அதோ அந்தத் தோழர் சிறைதனில் ஓராண்டு! இளைத்த உடல், காண்கின்றாய்; ஆனால் உள்ளம்? எஃகு! ஆமாம்! அவரே கரம் கூப்பி நிற்கின்றார் மாதெரிக! ஏனென்று அறிந்துகொள் ஆரணங்கே! மத்தமிழ் காத்திடவே புறப்பட்டான் ஓர் காளை! இந்தி தமிழர்க்குச் செந்தீ என்றான், காரணம் பலகாட்டி! எப்பக்கம் வந்து புகுந்து விடும்? இந்தி எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும்? என்ற பண் எழுப்பிப் புறப்பட்டான். பதைக்கப் பதைக்கச் சுட்டு வீழ்த்தினர் அத்திருமகனை! அந்த மாது அவன் மாதா! நாடு வாழ மகனைப் பறிகொடுத்தாள் மாதா! அவள் கால்பட்ட மண், மணம் பெற்றிடும் என்றிடலாம். மகனை இழந்திட்டேன், மாத்தமிழுக்கு அளித்துவிட்டேன், ஒருவனை நான் கொடுத்து இதோ இத்தனைப் பிள்ளைகளை நான் பெற்றேன்! இவர்களிடம் உள்ளான் என் மகன், இறந்தானில்லை! இவர்களோடு கலந்துவிட்டான், மடியவில்லை! மலரினின்று கிளம்பும் மணம் கலந்திடும் காற்றில் என்பர் என் மகன் நறுமணமானான்; பிணமானான் என்று எண்ணிடுதல் பேதமை! என்று எண்ணித்தானோ அந்த மாது நடக்கின்றாள் எழுச்சியூட்டி! — இதுதானடி தேனே! என் கழகம்! சொக்குப்பொடி என்ன போட்டதுவோ என்று கேட்டாய் அன்று; இன்று சொல்லுவாய் காண்கின்ற காட்சி பற்றி உன் கருத்தை. இதுதான் என் கழகம்! என் குடும்பம்!—என்று கூறுகின்றான், மயிலாள் கடைக்கண்ணால் பார்க்கின்றாள். 'களுக்' கென்று சிரிக்கின்றாள், காரணம் அறியாது திகைக்கின்றான் மணவாளன்; ஒன்றும் தெரிவதல்லை உங்களுக்கு என்கின்றாள்; என் கழகம்! என் குடும்பம்! என்று கூறுகின்றீர், உம்மில் நான் கலந்து ஓருயிராய் ஆனபின்னும்! உமக்கு இது குடும்பம் எனில் என் குடும்பம் அதன்றோ என்கின்றாள். பூரித்துப் போகின்றான். என்ன இனிமையுடன் எனக்களித்தாய் நல்லுணர்வு! தவறே செய்து விட்டேன், தத்தையே! இஃது நம் கழகம்! நம் குடும்பம்! என்று கூறுகின்றான்;

காட்சிகள் இதுபோலக் கண்டிடவும், கருத்து விருந்து பெற்றிடவும் மாநில மாநாடு செல்லப் போகின்றோம் என்ற செந்தேனை உண்டதினால் புதுப் பொலிவே நீ பெற்றாய். தம்பி! உன்னைக் காணும்போது உள்ளபடி நான் உதயசூரியனைக் காண்கின்றேன். உலகுக்கு ஒளியூட்டி, உயிரூட்டி வந்திடுவது உதயசூரியன். அஃது இல்லையெனில் வேறு எதுவும் இல்லை என்பர்! அதனிடம் தொடர்பு கொள்ளாப் பொருள் எதுவும் பொருளாகாது என்றுரைப்பர்! உதயசூரியன் போன்று இன்று தமிழகத்துக்கு நீ இருந்துவருகின்றாய். காரிருளை ஓட்டி விட்டாய்! காலை மலர்ந்தது மாந்தர் கண் மலர்ந்து நடமாடுகின்றார் என்றாரல்லவா புரட்சிக் கவிஞர். தம்பி! உதயசூரியன் போல நீ புறப்பட்டாய், நாட்டவர் உள்ளம் மலர்ந்தது, நம்பிக்கை எழுந்தது. நாடு வாழ்ந்திட நற்பணியாற்றிடும் ஆற்றல்மிகு தோழர்களின் அணிவகுப்பு கண்டோம், நாம் பட்டிதொட்டி எங்கும் பாங்குடனே அமைந்துள்ள அணிவகுப்பு எல்லாம் ஓரிடத்தில் பேரணியாய்-சீரணியாய் கூடுகின்றதன்றோ. மாநில மாநாடெனில் இஃதேயன்றோ பொருளாகும்.

பேரணி மட்டுமன்று, இதுபோது கூடிடுவது; போரணி! ஆமாம், வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா? மகராசர்கள் உலகாளுதல் நிலையாம் எனும் நினைவா? என்று முழக்கம் எழுப்பி, வீரர்காள் புறப்படுவீர்! கோழைகளே! ஓர்புறம் ஒதுங்கிடுவீர்! என்று பரணிபாடி, ஆதிக்கக் கோட்டையினைத் தாக்கித் தகர்த்திடக் கூடிடும் போரணி.

# குருதி கொடுத்து கொடிகாத்தோர் நினைவாக!

பற்பல நாட்களாக பல்லாயிரம் கூட்டங்களிலே எடுத்துரைத்தவைகளை எல்லாம் செயலில் காட்டிடக் கிடைத்திடும் வாய்ப்பாம் பொதுத் தேர்தல் களம் சென்று, புல்லர்களின் கொட்டமது அடக்கி, புத்தாட்சி அமைத்திடக் கிளம்பிடும் போரணி!

தமிழர்பெரும்படை நடைபோடும் காட்சி காணாத கண்ணென்ன கண்ணே! — என்று பாடிடக் கூடத் தோன்றுகிறது; பயிற்சி இல்லை, குரலிலே குளிர்ச்சி இல்லை.

மறவர்படை எழுப்பிடும் முழக்கத்தைக் கேளாத காதென்ன காதே! என்று இசைத்திட எண்ணம் எழுகிறது? இசைக் கலைக்கு நாம் ஏன் இழுக்குத்தேடுவது என்ற எண்ணம் குறுக்கிட்டுத் தடுக்கிறது.

ஆனால் தம்பி! நமது உடன்பிறந்தார் கூடிடும் மாநாட்டில், பேச்செல்லாம் இசையே! ஐயமுண்டோ!!

கோட்டை கொத்தளம் அமைத்து இந்த மாநில முழுதும் ஆண்டிருந்தார் நம் முன்னோர் என்று படிக்கின்றோம். தாரணி மெச்சிட வாழ்ந்திருந்தார் என்று அறிகின்றோம். கத்தும் கடல் அடக்கி வென்றார். கடாரம் கண்டார், முத்தும் பவழமும் யவனம் கொண்டு சென்றார், உலகின் மூத்தகுடி தமிழ்க்குடியே என்பதனை மெய்ப்பித்தார் என்றெல்லாம் படிக்கின்றோம். ஓரோர் வேளை, மெய்யாக அந்தநிலை இருந்திருக்கக் கூடுமோ, இல்லை வெறும் கற்பனையோ என்று ஐயம் எழக்கூடும்; ஆயின் தாழ்வுற்று நிலைகெட்டு, தாள் தொட்டால் பிழைத்திடுவீர் என்று கூவிக் கொக்கரிக்கும் கொடியோரால் கொட்டப்பட்ட நிலை எனினும், எத்தனை வீரமதைப் பெற்றுள்ளார் இம்மறவர், உறுதியின் தன்மை எத்தனை உன்னதமாய் உள்ளது இங்கு என்பதனை மாநில மாநாடதனில் காண்போர், ஐயம் அகன்றிடும்; அத்தனையும் உண்மையே; இற்றை நாளிலேயே இவர்க்கு இந்த ஆற்றல் உள்ளதெனில், அந்நாளில் பெரும் புலவர் கூறினரே அதுபோல ஏன் இருந்திருக்கமாட்டார்கள்! — எனக் கேட்டு, மரபின் பெருமைதனை முற்றும் உணர்ந்து, இதனை இழந்திடுதல் பெரும் தவறு என உரைத்து, மரபு காத்திடவும், அதன் மாண்பு வளர்த்திடவும் உறுதி பூண்டிடுவர்; உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

வாழ்வின் சுவைதன்னை வகையாய்ப் பல்
லாண்டு உண்டு, உடல் பெருத்து ஊழியர் புடை
சூழ தண்டு தளவாடமுடன் தார் அணிந்து
தேரேறும் அரசகுமாரர், செல்வர்

ஆகியோருக்காக நடத்தப்படுவது அல்ல, நமது கழகம்; ஆயினும் அத்தகையோர் பல இலட்சம் கொட்டி நடத்திடினும் எழமுடியாததோர் எழில், நீலமேகம் நகரில் எழச் செய்துள்ளனர்.

மாநாட்டுத் திடலை நான் சென்று முதலில் பார்த்த போது, பள்ளமும் மேடும் பயமூட்டின; கள்ளியும் காளானும் மிரட்டி நின்றன; கல்லும் முள்ளும் தைத்தன; ஆனால் நமது தோழர்களின் காப்பட்டு, எப்படி இருக்கிறது என்கிறாய்! நான் சொல்வானேன்! வந்து பார்க்கத்தானே போகிறாய்.

தம்பி! ஒருவிதத்திலே பார்த்தால் உனக்குக் கிடைத்திடும் வாய்ப்பு சிறப்புடையது. அந்த வெட்ட வெளியை, மணிப்பிரவாள நடையிலே கூறுவதானால் 'ஜெகஜ்ஜோதி'யாக விளங்கிடும் நிலை பெற்ற பிறகு, நீ காண்கிறாய். உன் கண்களிலே, நான் கண்ட மேடும் பள்ளமும்படாது. பட்டொளி வீசிப் பறந்திடும் கழகக் கொடியும், அதனை ஏந்தி நின்றிடும் வீரனின் உருவமும், அந்தக் கொடிகாத்து நின்றதால் கொடியோர்களால் தாக்குண்டு இறந்துபட்டோரின் உடலங்களும், படுகாயமுற்ற மாவீரர்களின் உருவங்களும் தெரிந்திடும். கண்டதும் நாம் நடந்துவந்த பாதை எப்படிப் பட்டது என்பதும் நமக்காக உயிர் நீத்தோர்கள் எத்தகைய உத்தமர்கள் என்பதும் நன்கு விளங்கிடும்.

கொடி ஏந்தி நின்றிடும் வீரர் கோட்டம் எழுச்சியூட்டும் விதமாக அமைந்திருக்கிறது. கண்டு கண்டு களித்திடுவாய்—திண்ணம்.

நாம் சாமான்யர்கள்; மாளிகையும் ஆங்கோர் செயற்கைக்குளமும் அதிலே குடைந்தாடும் குமரிகளும் ஊர்ந்திடும் அன்னங்களும், பூங்காவும் ஆங்கு பாடிடும் புள்ளினமும், அணி மணி பூண்ட ஆரணங்குகளும் கண்டா களிப்படையப் போகிறோம்.

நாம் எவ்வளவு பெருந் தொகையினராக வளர்ந்திருக்கிறோம் என்பதனை எடுத்துக் காட்டும் காட்சியே நமது கண்களுக்கு விருந்தாகும். சொல்லப் போனால், அந்தக் காட்சிக்குச் செல்வவான்கள் காணும் காட்சி எந்தவிதத்திலும் ஈடாகாது! காணும்போது, அண்ணன் சொன்னது முற்றிலும் உண்மை என்பதனை ஒப்புக் கொள்வாய்.

குடிமகனாய் உள்ளோன் ஊர்சுற்றும் உழைப்
பாளி, தோள் குத்தும் முட்கள் நிறை மூட்டை
தனைச் சுமப்போன், தாங்கொணாப் பாரந்தனைத்
தூக்கித் தத்தளிப்போன், கலத்தில் பணிபுரிவோன்
உலைக் கூடத்தில் உழல்வோன் ஏதோ இசை
எழுப்பி அதில் இனிமை காண நினைப்போன்!

## இது நம் வாக்குறுதி!

காங்கிரசாட்சி மக்களிடம் கசக்கிப் பிழிந்து வசூலித்திருக்கும் வரிப்பணத்தின் அளவைக் கணக்குப் பார்க்கும்போது அந்த ஆட்சி மக்களின் வசதிக்காகச் செய்திருக்கிற ஏற்பாடு மிகமிகக் குறைவு என்பது நமது குற்றச்சாட்டு!

காங்கிரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆட்சியை மக்கள் மற்றவர்களிடம் ஒப்படைத்தால் காங்கிரசாட்சியால் ஏற்பட்டுள்ள கேடுகளை நீக்குவதுடன், ஏழைகளைக் கசக்கிப் பிழியும் வரிகளைக் குறைப்பதுடன், நலன்கள் மிகுதியாகும்படிச் செய்யமுடியும் என்பது நாம் அளிக்கும் வாக்குறுதி!

# பாசறையைப் பார்வையிட வருகிறாய் தம்பி!

**ஏரடிப்போன்! தூக்கம் தொட்டிழுக்கும் துயர்**
**கக்கும் கண் கொண்டோன்.**

இத்தகையோர் அமைத்துள்ள பாசறை, தி.மு.க. ஆனால் இவர்கள் முயன்றால் எதனையும் முடித்திட வல்லார் என்பதனை நாடு அறியும். அவர்தம் முயற்சிக்கு ஒரு அழகுமிகு சான்றாக அமைகிறது கலமேகம் நகர்—மாநிலமாநாடு!

தம்பி! 1967 வந்து நம் கதவைத் தட்டுகிறது. ஒலியே கேட்கத் தொடங்கிவிட்டது, விழி! எழு!—என்று கழகம், மாநில மாநாடு மூலம் கூறுகிறது. பரணி பாடிடும் முன்னணியினர். நாட்டு நிலைமையினை எடுத்துக் காட்டி, அதனை மாற்றி அமைத்திடும் வழி வகை கூறி, செயலார்வம் தந்திடப் போகின்றனர்.

புத்தாண்டிலே அடி எடுத்து வைக்கின்றோம் என்பதனை விளக்கிடும் முறையிலே அமைந்துள்ள முகப்பும், கைத்திறன் கொண்டோர் கட்டி அளித்திட்ட கொட்டகையும், அதிலே பகலெது இரவு எது என்று, தெரிய ஒட்டாது அமைந்துள்ள ஒளி முறையும், ஓர் புறம் கலைக்கண் காட்சியும், எங்கு பார்த்திடினும் சிலை வடிவங்களும், தம்பி! புறத்தோற்றமே எவருக்கும் பூரிப்புத்தரத்தக்கதாக அமைந்துள்ளது; அக மிக மகிழ்ந்திடுவாய்.

இத்தனைக் கோலமும் உண்டாகிட உழைத்தவர் எவர்? எவர் கரம் பட்டு இந்த எழில் உண்டாயிற்று! நமது உடன் பிறந்தார் உருவாக்கினர் அந்தத் திருவினை. அவர்களைத்தான் அரசியல் ஆதிக்கக்காரர்கள்,

**ஏனோ தானோக்கள், எச்சிற் கலையங்கள்**
**சாவு வரும் வரையில் சளைக்காது போரிடும்**
**கந்தலுடைக்காரர்**

என்றெல்லாம்—ஏசி வருகின்றனர்; அறிவாய்.

அந்த 'ஏனோதானோக்கள்' இன்று கழகம் கண்டு, நாட்டு நிலையையும் நினைப்பையும் மாற்றிவிட்டுள்ளனர். இன்று "ஏனோதானோக்கள்" எத்தர்களைக் கேட்கின்றனர் "இன்னும் எத்தனை நாள் உமக்கு இந்த வாழ்வு?" என்று. இடிச் சிரிப்புடன் இறுமாப்புடன் ஆதிக்கக்காரர் கூறுகின்றனர்," "என்றென்றும்" என்று! என்றென்றுமா! அப்படி ஒரு நினைப்பா! காலம் மாறிவிட்டது அறியாமல் பேசுகிறீர், காலம் பிறந்துவிட்டது; கணக்கு கேட்கும் காலம்; பிப்ரவரியில் கணக்குக் காட்டியாகவேண்டும், கவனமில்லையா! கணக்குத் தீர்த்துவிடப் போகிறார்கள் மக்கள், புரியவில்லையா?—என்று கூறுகின்றனர் மக்கள்.

"எமது ஆதிக்கத்தை எதிர்த்திடும் துணிவும் ஆற்றலும் படைத்த ஒருபடையும் உண்டோ?"—அவர்கள் கேட்கின்றனர்.

"உண்டு! உண்டாகிவிட்டது! திரண்டு நிற்கிறது!"—மக்கள் கூறுகின்றனர்.

"எங்கே அந்தப்படை? எவ்விடம் உளது?"—அவர்கள் கேட்கின்றனர்.

"அந்தப் போரணி காணவேண்டுமா? இந்தத் திங்கள் 29ல் கூடுகிறது. ஜனவரித் திங்கள் முதல் நாள் வரையிலே காணலாம் அந்தப் போரணியை"—என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தப்போரணியைக் கண்டுகளித்திடப் புறப்படுவதற்கான ஏற்பாட்டிலே ஈடுபட்டிருப்பதனால் தான், உன்னிடம், தம்பி! ஓர் புதுப் பலிவு தெரிகிறது.

எப்போது நடந்திடினும் நமது கழக மாநாடு ஓர் எழுச்சியூட்டும் நிகழ்ச்சி; இம்முறையோ என்றால் ஓர் தனிச்சிறப்பு தன்னாலே வந்துள்ளது.

பொதுத் தேர்தலுக்கு நாம் எந்த விதமாகப் பக்குவப்பட்டிருக்கிறோம் என்பதை நாடுகாணக்கூடிய விதத்திலும்,

ஏன் நாம் ஓர் புதிய ஆட்சிமுறையினை காண விழைகின்றோம் என்பதற்கான விளக்கம் அளித்திடும் முறையிலும்,

எந்தவிதமான கட்டுக்கோப்புடனும் பண்புடன் பயிற்சியுடனும் 'போரணி' திரண்டிருக்கிறது என்பதனை எடுத்துக்காட்டும் வகையிலும், இம்முறை மாநில மாநாடு அமைகின்றது.

படைக்கலன் யாது, உமக்கு?—என்று கேட்பர் பட்டத்தரசராகி விட்டோர்!

ஏழை அழுத கண்ணீர் கூர்வாளொக்கும் என்றார் வள்ளுவப் பெருந்தகை.

குமுறிடும் நெஞ்சினர், கசிந்திடும் கண்ணினர், காலமெலாம் உழைத்துழைத்து வியர்வை சிந்தினோர்—புரட்சிக்கே போதும் என்கிறார்கள் இப்படைக்கலன்! பொதுத் தேர்தலிலே வெற்றி ஈட்டிடப் போதாதவா, இப்படைக்கலன்கள்!!

ஆகவே தம்பி! இம்முறை மாநில மாநாடு காண வருவது, விளக்கம் பெற்றிட மட்டுமல்ல, விருந்து பெற்றிட மட்டுமல்ல, பாசறையைப் பார்வையிட வருகின்றாய்! ஆமாம், தம்பி! பாசறை!!

தேர்தல் அறிக்கையும் வேட்பாளர் பட்டியலும், இம் மாநாட்டிலேதான் வெளியிட எண்ணியுள்ளேன்.

கழகக் காவலர்கள் கருத்து விளக்கம் அளித்திட வருகின்றனர்.

கனிவு கொண்டுள்ள ஆதரவாளர்களான பெரியவர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர்; வாழ்த்தளிக்கின்றனர்.

நானும் சில பேசுவேன்; எனக்குத் தம்பி! பேசுவதைக்காட்டிலும், உன் பேசிடும் கண்களைக் கண்டு களித்திடவே மெத்த விழைவு. எனினும் ஏதாகிலும் பேசத்தானே வேண்டும்; பேசுகின்றேன்.

தம்பிதான் திறப்பாளர்; தென்றல் காண்பாய், புயலும் வீசும்! தேனும் உண்டு, வாள் வீச்சும் காண்பாய்! எல்லாவற்றிலும் ஓர் தனித்தன்மை இருந்திடக் காண்பாய், அதிலும் எம்முறையும் இல்லாத அளவு இம்முறை தம்பியின் பேச்சு அமைந்திருக்கும். பத்து இலட்சம யிற்றோ! பேச்சு சுவை பகக

# ஏடு கொள்ளுமோ எழுச்சி பொறித்திட!

தாகத்தானே இருக்கும். பத்து லட்சம் ரூபாய்களைத் திரட்டிக் கொடுத்து விட்டல்லவா, தம்பியைப் பேசச் சொல்லுகிறாய்! எழுச்சி மிக்கதாகத்தானே பேச்சு அமையும்.

மாநாட்டிற்கான முதற்கட்டமே நாம் பெருமிதம் கொள்ளத்தக்கதாக அமைகிறது.

சுயமரியாதை இயக்க நாள் தொட்டு நமது இயக்கத்திற்கு உயிர்ப்புச் சக்தி ஊட்டிவரும் காஞ்சி. கலியாணசுந்தரம், கொடி ஏற்றி வைக்கிறார்.

வாய்ப்புகள் அதிகம் கிடைப்பதில்லையே தவிர, கிடைத்திடும்போது, நான் அரசியல், பொது இயல் பிரச்சினைகள்பற்றிப் பேசி மகிழ்ந்திடுவது, காஞ்சியார் போன்றாரிடமே! என்னிடம் மற்றவர்கள் கூறுவதற்குக் கூச்சப்பட்டுக் கொண்டிருப்பர் பல விஷயங்கள்பற்றி. காஞ்சியார் அவ்விதம் அல்ல! ஒளிவு மறைவு கிடையாது. இயக்கத்திடம் உள்ளன்பு. என்னிடம்? பாசம்! அளவு கடந்த பாசம்! முன்பு நடைபெற்ற மாநில மாநாட்டில், எனக்கு மாலை அணிவித்துவிட்டு கட்டிப்பிடித்துக்கொண்டு குழந்தை போல அழுத காட்சி என்றும் என் மனதை விட்டு அகலக்கூடியது அல்ல. அவர் கொடி ஏற்றி வைக்கிறார் மாநில மாநாட்டில், இப்போது! நாட்டிலே நமது கொடியினை அவர் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஏற்றி வைத்திருக்கிறார்.

கழகத்திலே நேரடியாகத் தொடர்புகொள்ளாததற்கு முன்பே, 'பொறுப்பாளர்' என்ற நிலையினைப் பெறுவதற்கான நேசத் தொடர்பு எனக்கும் நண்பர் A. கோவிந்தசாமி அவர்கட்கும். எளிமை மாறாமல், எப்போது அழைத்து என்ன பணிதந்திடினும் பொறுப்புடன் நிறைவேற்றிவரும் பண்பினர். சட்டமன்றத்தில் வீற்றிருந்து நற்பணியாற்றிடும் தகுதி மிக்கவர். அவர் கலைக் கண்காட்சியினைத் துவக்கி வைக்கின்றார்.

அரிமா போன்றார் மாற்றாருக்கு; நமக்கோ அண்ணன்; அனுபவக்கனிக் கொத்து; அருமையான நகைச்சுவைப் பெட்டகம்; எதிர்ப்பு பல கண்டவர்; அன்பர்க்கன்றி வேறு எவருக்கும் அஞ்சிட மறுப்பவர்; அவர் கால்படாத கிராமம் இல்லை தமிழகத்தில் என்று கூறத்தக்க விதமாகப் பல ஆண்டுகள் சுற்றிச் சுழன்று வருபவர்; மேலவையில் உறுப்பினர்; சிற்றரசு. அவர் தியாகிகள் கோட்டத்தைத் திறந்து வைக்கின்றார். நமக்காக வாழ்ந்து, நமக்காக உழைத்து, நமக்காக உயிர் ஈந்த தியாகிகட்கு நாம் நமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வது முறைதானே!

அந்தக் கோட்டத்தைத் துவக்கி வைத்திட, அவர் மிகத் தகுதிபெற்றவர்; அவர் உரை உணர்ச்சி ஊட்டும் எழுச்சி கூட்டும் என்பதனை எடுத்துச் சொல்லவா வேண்டும். உடல் தளர்ந்த நிலையிலும், உள்ள உறுதி தளராதிருக்கும் அண்ணனல்லவா சிற்றரசு!

மற்றவர்! மற்றவரா? முரசு! முழவு! யாழ்! குழல்! வாள்வீச்சு! வேலெறிதல்! எல்லாம் உண்டு! மேடை அதிர, மாற்றார் நெஞ்சு அதிர, காங்கிரசாட்சியின் கொடுமைகளை எடுத்துரைக்கும் மதியழகன், இருக்கின்றார்; சங்கப் புலவர்கள் இவ்விதந்தான் அரசஅவை தன்னில் உரையாற்றி இருப்பரோ என்று எண்ணி வியந்து பாராட்டிடத் தக்க விதமான பேருரை ஆற்றிடும் நாவலர் நெடுஞ்செழியன் இருக்கின்றார்; அவர் கழக மாநாட்டுப் பொறுப்பாளர். அவர் 'தம்பி' இருக்கின்றார், வாதத்திறமையுடன் புள்ளிவிவரம் பல அள்ளி அளித்திட, மல்லிகை மலரெடுத்து மாலையெனத் தொடுத்திடும் நேர்த்திபோல, சொல்லில் சுவை கூட்டி பொருளில் தோய்த்து பொருத்தமுறப் பேச்சாக்கித் தருகின்ற மனோகரன் இருக்கின்றார்; சட்டமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றியமன்றத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி மன்றத்தார், ஏ! அப்பா! எவ்வளவு உள்ளார் நமது அணி வகுப்பில். ஒவ்வொருவர் திறன் குறித்தும் கூறிச்செல்வதெனில், இதழ் போதாதென்பதன்றோ, அவர் பற்றிய விளக்கம் அளிக்காது விட்டதன் காரணம்? பெரியதோர் பூந்தோட்டம்! எல்லா மலரும், எழில் மலர்; நறுமணம்; வடிவழகு! மாவட்டச் செயலாளர் நமது கழகத்திலுளார், எத்தனை நேர்த்தியான செயல் திறமைமிக்கவராயுளர். பேச்சு மட்டுமென்ன? பெருமரத்தை வீழ்த்த வல்லபுயலா? காணலாம்! கேட்டைக் களைப்பாற்றும் பூங்காற்றா? கிடைக்கிறது! வாதத் திறமையா? நிரம்ப! குறைவற்ற செல்வம் பெற்றுள்ளேன். தம்பி! உன்னையெல்லாம் வரவேற்று, கருத்து விருந்து தரப் போகும் வரவேற்புக்குழுத் தலைவராம் நீலநாராயணனும், மாநாட்டுச் செயலாளர்களாம் மன்னை ப. நாராயணசாமி, ஈ. ஆர். கிருட்டிணன், சி. வி. எம். அண்ணாமலை, கோ. செங்குட்டுவன், ஆகியோரும், தொண்டர் படைத் தலைவர் கே. எம். கண்ணபிரானும் துணைத் தலைவர்கள் சு. பாலன், தி. அ. நல்லதம்பி, எஸ் வி. வேலு அலமேலு அப்பாதுரை, சாகுல் அமீது ஆகியோர் மட்டுமென்ன! போரணியின் முன்னோடிகள் அலவோ! கலை உலகிலுள்ள கழகத் தோழர்களின் பாங்குதனை எண்ணி எண்ணி நான் மகிழாத நாள் உண்டா? விதைதூவி, முளைகாண நாம் பாடுபட்ட காலை, தமது இசையைப் பாய்ச்சிக் கழக வயல்

---

## சொல்லிவிடுவேன்!

கடை முதலாளி:- கொஞ்சமாவது கொடுக்க வேண்டிய கடனில்..

கடன்பட்டவன்:- இப்போது பணம் இல்லையே கொடுக்க.

முதலாளி:- பத்து ரூபாயாவது கொடுக்காவிட்டால், நீ கடன் வாங்கி இருக்கிற பேர்வழிகளிடமெல்லாம், எங்களுக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகை முழுவதையும் கொடுத்துவிட்டார் என்று சொல்லிவிடுவேன். எல்லோரும் உன்னைப் பிய்த்துப் போட்டுவிடுவார்கள்!

அவன் மறுபேச்சுப் பேசாமல், பத்து ரூபாய் செலுத்திவிட்டுச் சென்றான்.

# புத்தாட்சி கண்டு புதுவாழ்வு அளித்திட, வா!

செழிக்கச் செய்த என் அருமை K. R. ராமசாமியின், தோழமை உள்ளந்தனைக் கண்டு பாராட்டாதார் உண்டா? கருத்து விருந்தளிக்க, பாடமாட்டேன்! —என்று பாடக் கேட்டு மகிழாதார் உண்டா? தமிழகத்தின் கண்மணியாய், கலை உலக நன்மணியாய், அன்பு மணியாகத் திகழ்ந்திடும் புரட்சி நடிகர் M. G. ராமச்சந்திரன், பொதுத் தேர்தலில் ஈடுபட இருக்கின்றார்; என்னிடம் தனியாகப் பேசுங்காலை எந்த அளவு தயக்கமும் கூச்சமும் தென்படுகிறதோ, அந்த அளவு, மேடை ஏறிப் பேசும்போது எழுச்சி கலந்திருக்கக் கேட்டின்புற்றிருக்கின்றேன். அவர் உரை கேட்குங்காலை, தேனுண்ட வண்டாகி கழகத் தோழர் சொக்கிடுவர், காண்கின்றாய். இலட்சிய நடிகர் இராஜேந்திரனும், நடிகமணி D. V. நாராயணசாமியும், என்னுடன் உண்டு உறங்கி, உரையாடி உவகையூட்டிய, எங்கள் குடும்பத்துப் பிள்ளைகள். நாடக நடிகர்களாக இருந்த நாள்தொட்டு, பொதுத்தொண்டாற்றும் ஆர்வம் மிக்கார். அரசியல் பிரச்சினைகளை ஆய்ந்து பார்த்துப் பேச வல்லார். அவர்களின் உரைகேட்டு அகமகிழ்வுடன் தெளிவும் பெற்றிடலாம். மற்றும் நடிகர்கள் ஆனந்தன், கண்ணன், வாசு, போன்றோர், நமது இயக்க வளர்ச்சியிலே நாட்டம் காட்டிப் பணியாற்றி வருகின்றனர். மகிழ்ச்சி. நன்றி. என்னிடம் பற்றுக்கொண்டுள்ள நண்பர்கள், சற்றுத் தொலைவிலே நின்றுள்ளார் என்றால், பழகிடக் கூச்சம் என்பதுதான். மற்றும் பலர். கலை உலகத் தோழர்களின் கனிச்சாறு போன்ற உரை பல உண்டு.

வழக்கறிஞர்! ஆம், தம்பி! கழகத்தில் பற்றுமிகக் கொண்டு பணியாற்றி வருகின்ற வழக்கறிஞர்கள், தஞ்சையில் மாநாடே நடத்திவிட்டார். எத்தனை எத்தனை இளைஞர்கள்! எவ்வளவு தெளிவு! கழகத்திடம் எத்தனை கனிவு! அவரெல்லாம் வருகின்றார்.

தமிழ் நாடெங்கும் சென்று கழகக் கொள்கைதனை எடுத்துரைத்து வலிவு சேர்க்கும் பேச்சாளர் அவ்வளவும் காண்கின்ற திருஇடம் நீலமேகம் நகர் ஒவ்வொருவரையும் காட்டி மகிழ விருப்பம் மிக உண்டு. நேரம் இல்லை. போதுமான தாளும் இல்லை. அவர்கள் எல்லாம் என் நெஞ்சில் இடம்பெற்றார். அவர்கள் சென்று குவித்துத் தந்திடும் கருவூலத்தைப் பெற்றுத் திகழ்பவனே நான்.

அவர்களை எல்லாம் காணவும், அவர் உரை கேட்கவும், எனக்கு உவகை ஊட்டவும், எல்லாவற்றிற்கும் மேலாக, மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கத்தக்க புத்தாட்சி அமைத்து நடத்திடும் ஆற்றல் பெற்றோர் நாம் என்பதனை நாட்டுக்கு எடுத்துக்காட்டவும், தம்பி! மாநில மாநாடு வந்திடப்போகின்றாய்! ஒவ்வொருவரும் தம் வாழ்வில் பெறத்தக்க ஒருசில எழுச்சியூட்டும் நிகழ்ச்சிகளில், தலையாயது இம்மாநில மாநாட்டு நிகழ்ச்சி. அதனை எண்ணி எண்ணி நீ மகிழ்ந்திருக்கும் வேளையில், அரசியல் பற்றிக்கூட பேச விருப்பமில்லை. புறப்படு, தம்பி! புறப்படு! நாவலர் சொல்வது கேட்கிறதல்லவா, "சிறுத்தையே! வெளியே, வா!" நான் வயது முதிர்ந்துகொண்டு போகும் நிலையினன் அல்லவா! ஆகவே அவர்போல அழைக்கவில்லை. "செந்தமிழே' வா!" என்று அழைக்கின்றேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

## இருப்போரே வென்றால்..?

ஒன்றிரண்டு எனஎண்ணி அரிசி வாங்கி
உழக்கினிலே சோறாக்கி, ஊசி கொண்டு
மூன்றுனக்கு நான்கெனக்கே எனக் கணக்கு
முறைபிரிக்கும் காலத்தை வேண்டின், நாளை
என்றிருக்கும் தேர்தலிலே காளை மாட்டாரி
எடுத்துதரும் ஒன்றிரண்டு காசால், தாங்கள்
இன்றிருக்கும் நிலைமறந்து வாக்குச் சீட்டில்
எவர்க்கேனும் குறிபோட எழுந்தே கட்டும்!

நான்குவிரற் கடைதுணியும் ஐந்து ரூபாய்,
நாலடிமண் வீட்டிற்குக் குடியிருக்க,
நின்றிருக்க, உட்கார மட்டில், ரூபாய்
நிச்சயமாய் ஐம்பதுதான்! உறங்க வேறு!
என்றிருக்க வேண்டுமெனில் காளை மாட்டாரி
எடுத்துரைக்கும் சொற்களையும் இனிதாய் [நம்பி
இன்றிருக்கும் இடர்ப்பாட்டை நினையாராகி,
ஏற்றட்டும் இவர்களையே ஆட்சி செய்ய!!

"ஏழைகளே இங்கில்லை, வியப்பு வேண்டாம்:
இங்கிருக்க விடுவோமா; இறந்து போனார்.
கோழைகளே! செல்வமெலாம் பொதுவாய் ஆச்சு,
கூடியுள சிலநூறு பணக்காரர்க்கே!"
பஞ்சமெனல் வாழ்விற்கே! அல்லா திங்கு
பசி,நோய்க்கும், ஊழல்வகை, லஞ்சத் திற்கும்,
மிஞ்சுகிற வறுமைக்கும் இல்லை" என்னும்
மேன்மைபெற(!) உழைக்கட்டும் இவர்கள் வெல்ல."

பிள்ளைக்கும் ஐந்நூறு வரியாய் வேண்டும்;
பேசுவதை அளவெடுக்கும் பொறியை வாயின்
உள்ளிருத்தி அதுகாட்டும் அளவிற் கேற்ப
ஒன்றிரண்டு பத்துக்கள் வரியும் உண்டு;
உள்ளிழுக்கும் மூச்சுக்கே வரியோ ஏற்றம்
உடன்விடுக்கும் மூச்சுக்குச் சலுகை உண்டு.
எள்ளலல்ல! இந்நிலையும் காண வேண்டின்
ஏகட்டும் காங்கிரசை ஆட்சி யேற்ற!!

புதுவை. அரி. தென்னகன்.

# பாவாய்

கனகு

யாரோ தட்டி எழுப்பித் தூக்கி நிறுத்தி விட்டாற்போல் நல்லையன் படுக்கையிலிருந்து எழுந்து நின்றான். சொல்லி வைத்தாற்போல் தொலைவிலுள்ள மணிக்கூண்டொன்று ஐந்து முறை அடித்து ஓய்ந்தது. 'இன்னிக்கு அரைமணி நேரம் லேட்டாப் போச்சுதே' என்று தனக்குள் முனகிக் கொண்டு பரபரப்போடு காய் மார்க்கெட்டை நோக்கிக் கிளம்பினான். கால்கள் தம் போக்கில் விரைந்து நடைபோட்டுக் கொண்டிருந்தன. மனம் முதல் நாள் தன் மனைவி பாவாயோடு நிகழ்த்திய உரையாடலை அசை போட்டது.

"இன்னிக்கு ரெண்டு ரூபா கெடைச்சுது" என்று தன் மடியிலிருந்த சில்லரையை எடுத்துப் பாவாயிடம் அவன் நீட்டிய போது அவள் மகிழ்ச்சிக்குரல் எழுப்பினாள்.

"பரவாயில்லை மச்சான். இன்னிக்கு மாதிரி இன்னம் நாலு நாளு கெடைச்சதுன்னா நம்ம சின்னப் பையனுக்கு ரெண்டு ரூபாயிலே ஒரு புதுச் சட்டை வாங்கிப் போடலாம்!"

"ஆசை என்னமோ இருக்குது. அதுபோல அதிட்டமும் இருக்கணுமே" என்று அலுத்துக் கொண்டான் நல்லையன்.

"பயப்படாதே மச்சான். இன்னியை விட இன்னம் நாலு தெருவு அதிகமாக சுத்தினியானா நாம்ப நெனைக்கிறது கட்டாயம் கெடைச்சுப் பூடும்."

"நாலு தெருவென்னா பாவாயி. மேல் கொண்டு பத்துத் தெருவு கூட நான் சுத்தியலையத் தயாராய்த் தான் இருக்கிறேன். ஆனா அதுக்கு ஏத்தாப் போலே சரக்கு வேணுமே பேரத்துக்கு."

"இன்னா மச்சான் அப்படிச் சொல்றே! நீ லாரியிலே வந்து எறங்கற அயன் சரக்கு வாங்கியா பேரம்பண்றே மண்டி முதலாளிங்க கயிச்சிக் கட்டின பிஞ்சுங்கள தானே எடுத்தாறே!"

"அட கயிச்சிக் கட்டினதன்னா போனதும் கெடைச்சுப் பூடுமின்னு நெனைச்சிக் கிட்டியாங் காட்டியும். அத்தே வாங்கறதுக் குள்ளாற பேராணன் போயி பேராணன் வந்துடுது. அந்த கயிச்ச வாயெகளி எம்மா அடிதடி எம்மாம் போட்டி. நீ பாத்தியாங் காட்டியும் தெரியும்"

"இன்னா பண்றது. எல்லாத் தொழிலுக்குந்தான் போட்டி. போட்டியைப் பாத்து நம்ம சும்மாங் காட்டியும் நின்னுப் போட முடியுமா?"

"அதுதான் சொல்றேன், இன்னிக்கு வந்த மாதிரி நாளைக்கும் கெடைக்குமின்னு நெனைச்சுகினு எத்தையும் செஞ்சுபோட முடியாது. கெடைச்ச வரைக்கும் அதிட்டமின்னு தெய்வத்து மேலே பாரத்தே போட்டுட்டுப் போக வேண்டியது தான்."

பாவாய் அதற்கு மேல் தன் கணவனிடம் பேச்சுக் கொடுக்கவில்லை. அவனுக்காக எடுத்து வைத்திருந்த பழைய கஞ்சியை ஊற்றிவர அடுப்படிப் பக்கம் திரும்பினாள்.

நல்லையனோடு ஆசையிடம் வெளிப்படையில் மறுத்துப் பேசி விட்டாலும், உள்ளுக்குள் அவளுக்கும் ஆசைதான். தன் சின்ன மகனுக்கு ஒரு புதுச்சட்டை வாங்கிவிட வேண்டும் என்று.

கழித்து ஒதுக்கிய வாழைக்காய்களுக்காக தன்னைப்போன்ற ஏனைய கூடைக்காரர்களோடு அவன் தினம் தினம் நடத்திவரும் போட்டி, காலம் எல்லாம் அவன் பார்த்து வரும் போட்டிதானே. எப்போதையும்விடச் சற்றே முன்னேறபாட்டோடும், விழிப்போடும் அவன் செயல்பட்டால் மற்றவர்களை விடக் கொஞ்சம் அதிகமாய் வாங்கிக் கொண்டு விடுவது அவனுக்கொன்றும் பெரிதல்ல. ஆனால் அன்றாடம் அந்தக் கழித்த வாழைக்காய்களை விற்றே ஜீவனம் நடத்துவதில் தன்னில் எந்த வகையிலும் குறையாத, தன்னையொத்த மற்றவர்களையெல்லாம் அடித்துப் பிடித்து நெட்டித் தள்ளி முந்திக்கொண்டு போய்த் தான் மட்டும் வாரிக் கொட்டிக் கொண்டு விடவேண்டும் என்ற பேராசை எப்போதுமே அவனுக்கு ஏற்பட்டது கிடையாது. எல்லாருக்கும் கிடைப்பதும் தனக்கும் கிடைக்கட்டும் என்ற உயரிய போக்கு எதையுமே எட்டையும் எடுத்துக் கூடப் பார்த்தறியாத அந்த ஏழையின் உள்ளத்தில் காலம் எல்லாம் ஊறிப் படிந்து போய்க் கிடந்தது. இன்று தன் மனைவி வெளியிட்ட ஆசையைக்கேட்டதும் அந்த உள்ளம் சற்றே தன் இயல்பிலிருந்து நெகிழ்ந்து கொடுத்தது.

'பாவாய் சொன்னது போல ஒரு நாலு நாள் மட்டும் நான் அப்படிச் செய்தால் என்ன?' எதிரே ஊற்றி வைத்திருந்த கஞ்சியை ஒரு மிடறு குடித்துவிட்டுத் தனக்குத்தானே இப்படிக் கேட்டுக் கொண்டான் அவன்.

'ஆமாம், ஒரு நாலு நாள் மட்டும் அப்படிச் செய்து போடுவோம்'

கஞ்சி குடித்ததால் ஏற்பட்ட வயிறறின் நிறைவோடு இந்த முடிவையும் அவன் மனம் நிறைத்துக் கொண்டது

அந்த முடிவைச் செயலாக்கும் திடத்தோடுதான் அவன் கால்கள் இப்போது எட்டி நடை போட்டுக் கொண்டிருந்தன.

ஊரெழும்பு முன்னரே தான் எழுந்து விடும அந்த அங்காடி வட்டாரம் கலகலப்பை ஒலி முழக்க மாக்கிக் கொண்டிருந்தது. நல்லையன் பல கடைகளைத் தாண்டி வாழைக்காய் மண்டிகள் வாசையாய் இருக்கும் சந்துக்குள் நுழைந்தான்.

வழக்கம் போலக் கழித்துப் போடப்பட்ட வாழைக்காய்கள் ஒவ்வொரு மண்டி எதிரிலும் குவிந்து கிடந்தன. ஆனால்—அவனது சகாக்களான ஏனைய கூடைக்காரர்கள் யாரும் அந்தக் குவியல்களை நெருங்காமல் கூட எட்டி நிற்கிறார்களே ஏன்?

அவனுக்கு வியப்பாய் இருந்தது. எதிரில் நின்ற சகா ஒருவனிடம் கையை உயர்த்திச் சாடையில் கேட்டான்

"ஏன், இன்னம் பேரம் ஆகலையா?" அவன் சொன்ன பதில்—பதிலா அது!

"இனிமே இந்தக் கயிச்ச வாயெப் பிஞ்சுங்களே நமக்குத் தர மாட்டாங்களாம். மார்க்கெட் பூரவும் ஒரு பெரிய முதலாளி காண்ட்ராக்ட் எடுத்துட்டாராம்; அதுங்களே அவரு லாரியிலே ஏத்தி வேறே எங்கேயோ கொண்டு போகப் போறாராம். நாம்ப இனி வேறே பொயப்புப் பார்க்க வேண்டியதுதான்."

"பாவாயி, நீ பாவ ஆயி" என்று நல்லையன் தன்னை மறந்து எழுப்பிய பேரோலத்தை அந்த மார்க்கெட் வட்டாரம் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. அது தன் போக்கில் கலகலப்போடு செயல்பட்டுக் கொண்டுதானிருந்தது.

# பகுத்தறிவு

அறிவது அறிவு! அறிந்துகொள்வது அறிவு! அறிந்தபடி நடப்பது அறிவுடைமை!

உடைமைஎன்பதுபொருள், அறிவுடைமை அறிவுப் பொருள். அழிவுப் பொருள் அகிலத்தில் அதிகம். அவற்றிற்கிடையே அறிவுப் பொருள் மட்டுமே அழியாப் பொருள்.

உண்ணலில் — உடுத்தலில் — உறையுள் வகைகளில் — எண்ணலில் எல்லாம் அறிவே அடிப்படை.

நாட்டின் வளர்ச்சிக்கு-வீட்டின் உயர்ச்சிக்கு—கேட்டின் அழிவுக்கு எல்லாம் அறிவே துணை.

நெஞ்சத்தில் நிலைத்து, கட்டையோடு கட்டையாகுமட்டும் துணை நிற்கும் தூயபொருள் அறிவுடைமை. அது நெஞ்சின் அரண்.

அறிந்தார்க்கும் — உணர்ந்தார்க்கும் துயரில்லை — பயமில்லை! வருகின்ற நன்மை, தீமைகளை அறிகின்ற பலம் இருந்தால் வாழ்வில் மயக்கத்திற்கும், தயக்கத்திற்கும் வேலை இல்லை.

சென்றவிடமெல்லாம் சிறப்பெய்தும் அறிவு! கொண்டவிடமெல்லாம் கொலுவிருக்கும் அறிவு!

உள்ளத்தில் நிலைத்துவிடும் அறிவு உண்மைகளைப் பிரித்து, வகுத்தும் தொகுத்தும் காட்டும்.

ஆய்ந்துணர்ந்து செயற்பட்டால் மாய்ந்துவிடும் துயரெல்லாம்.

அறிவு, அது நெஞ்சத்தை ஆளும் அரசு அதன் ஆட்சி நல்லாட்சியாயின் மனநிலம் செழிக்கும்; பொல்லாட்சியாயின் மனத்தையே அழிக்கும்.

நெஞ்சத்தை அறிவு ஆட்சி செய்தால், நேரிடும் துயரும், துன்பமும் பஞ்சொத்து பறந்தோடும். கொஞ்சத்தில் அறிவின் சிறப்பை அளந்திடல் இயலா.

காட்டின் நடுவே — காரிருளிடையே-மேட்டின் மேலே வாழ்ந்தவன்— அறிவில் தெளிவால்— ஆராயும் திறனால் எண்ணத்தின் முயற்சியால் நாட்டைக் கண்டான் -உலகத்தைத் தனக்கேஉரியதெனக் கொண்டான்.

அறிவின் ஆற்றல் பெரியது—அரியது! அரியதான அந்த அறிவு சிறியதையும் பகுக்கும்! பகுத்துப் பார்ப்பதே பகுத்தறிவு! பகுத்துப் பகுத்து, உள்ளதையெல்லாம் வகுத்துக் கொண்டே போய்...கழித்துப் பார்த்தால்? பூஜ்யமதான்! எனவே,

பகுப்பதை— வகுப்பதை மீண்டும் தொகுத்துப் பார்க்கின்ற உள்ளத் தெளிவு வரவேண்டும். அப்போதுதான் நன்மையின் எடை கூடுதலாக இருக்கும்.

புடைத்துப் புடைத்து, உண்மைகளை எடுக்கவேண்டும். புடைத்தெடுத்த உண்மைகளை உயிரெனவே ஓம்பவேண்டும். அதை விட்டு—...

புடைத்ததையும் பதரிடையே போட்டு விட்டால் கடைந்தெடுத்த மதால்வியே பரிசாகக் கிடைக்கும்.

நெஞ்சத்தின் அரண் அறிவு. நெஞ்சம் உடலின் இயக்கி! இயக்கி ஒழுங்காய் இயங்கின் — இயக்கம் நோக்கப்படின் பயணம் நிலைப்படும்! கொண்டுவிட்ட இலட்சிய இலக்கைக் கண்டுவிட முடியும்!

முறை காண்பதுஅறிவு. பிரச்னைகளை வரையறுப்பது அறிவு. திரை கடல் நடுவே கலம் செலுத்துவது போல திசைதோறும் அறிவைச் செலுத்திடவேண்டும்.

வசை யொழித்து—இசை மிகுத்திட 'அறிவு வழி நடத்தலே' வேண்டும்

எப்பொருள்பற்றி, எவரெவர் சொன்னாலும், அப்பொருள்பற்றி ஆய்வதே அறிவாம்!

ஆராய்வதென்பது கீரைக்கிடையே உள்ள புல்லையும், கல்லையும் பொறுக்கி எடுப்பதாம்! புல்லைப் போக்கி நெல்லைப் போற்றுவதாம்!

தேறாத நெஞ்சில் அறிவு நீர் ஊறாது!

எல்லாப் பொருள் பற்றியும் அறியவேண்டும் — உண்மைகள் தெரியவேண்டும். தெரிந்துத் தெளிந்த பின்னர் அவற்றைப் பகுத்துவைக்கவேண்டும்; பகுத்ததைத் தொகுத்துப் பயன்படுத்த வேண்டும். பகுத்து அறிவது பகுத்தறிவு! பகுத்ததைத் தொகுத்து அறிவதே சால்புடைமை!

அன்பும், அறிவும் இணைந்துவிட்டால் அங்கே இன்பமழை பொழியும்! அந்த மழையில் பண்புப்பயிர் விளையும்.

அறிவு, கூர்மை மிகுந்த கத்தி! அதனை நல்லன மலரவகைப் படுத்தவேண்டும்! அழிவுக்கு அறிவு துணைபோகவேண்டுமா! உயர்வுக்கே அறிவு விலைபோகவேண்டும்!

வாழ்க அறிவுலகு!

— ஐ. இளவழகு.

## கேட்டுத் தீரவேண்டும்!

ஜனநாயகமா? மகிழ்ச்சி; வரவேற்கிறோம்! சோஷலிசமா? மிக்க மகிழ்ச்சி; வரவேற்கிறோம்! ஆனால்-இவர் யார்? அதோ, அவர் யார்? இவருடைய நிலை என்ன? விலை என்ன? வேலை என்ன? அதோ, அவருடைய இயல்பு என்ன? இருப்பு எவ்வளவு? இவர் போன்றோர் உள்ள இடத்திலா சோஷலிசம் வளரும், மலரும்? என்று கேட்டிடத் தெளிவும் துணிவும் வேண்டும்! இல்லையேல் மனித உரிமை படுகொலை செய்யப்பட்டு விடும்!



# பாண்டியன் திருமேனி

கே.ஜி. இராதா மணாளன்

## 2 30

## 'விடுங்கள் என் கையை!'

"அஞ்சலை! என்னை வார்த்தைகளால் கொல்லாதே, இந்த வாளினால் ஒரே குத்தாகக் குத்திக் கொன்றுவிடு!" என்று கனகசேனன் சொல்லி, உறையிலிருந்து இழுத்த வாளை அஞ்சலையிடம் நீட்டினான்.

"பரிதாபப்படுகிறேன், இளவரசே—தங்களது நிலை கண்டு!", என்று அஞ்சலை, தன் கோபத்திற்கிடையே சிரித்துக் கொண்டே கூறினாள்.

"என் மீது பரிதாபப்படுவது உண்மையானால்—இந்த அறையைவிட்டு உடனே நீ போய்விடு! நான் மிகவும் கவலையோடு இருக்கிறேன்!..."

"ஏமாற்றமடைந்ததினால் உண்டான அவமானத்தோடும் இருக்கிறேன் என்று சொல்லுங்கள்!"

"அஞ்சலை! நான் யார் என்று உனக்குத் தெரியாது! அதனால்தான் அதிகமாகப் பேசிக்கொண்டே போகிறாய்!"

"எனக்கா தெரியாது—நன்றாகத் தெரியுமே தாங்கள் யார் என்று! வரிசையாகத் தங்கள் வரலாற்றைச் சொல்லட்டுமா?"

"வாயை மூடு—என் கோபத்தை அதிகமாக்காதே!"

"கோபத்தை அதிகமாக்கினால் உமது கையிலுள்ள வாளை எனது இரத்தம் ஈரமாக்கும்! அதுதானே முடியும் உம்மால்? வேறு என்னை என்ன செய்துவிட முடியும் உம்மால்?"

"நானே விலை கொடுத்து வாங்கிய வினை இது!" என்று வாளை உறையில் போட்டபடி கட்டிலில் போய் உட்கார்ந்தான்.

"அது இப்பொழுது தேள் போல் கொட்டுகிறது அல்லவா?" என்று கோபங் கலந்த குறும்போடு கேட்டுக்கொண்டே அஞ்சலை அவன் அருகில் போய் நின்றாள்.

"அஞ்சலை! இந்த ஐந்து நாட்களாக நீ என்னைப் படுத்தும் பாடு இருக்கிறதே—"

"மதுரை மன்னர் சிறையில்படும் வேதனையைவிட அதிகமிருக்காது என்பது எனது தாழ்மையான கருத்து!"

"அவனாவது அங்கு வேதனைப் படுவான்—இங்கு நான் சித்திரவதை அல்லவா செய்யப்படுகிறேன்! இராமேச்சுரத்திலிருந்து இளந்திரையன் இன்று காலை வந்துவிட்டான் அல்லவா? அவனிடம் சொல்லி நாளைக்காலையே உன்னை அறிவொளி அடிகளிடம் கொண்டு போய்ச் சேர்த்து விடச் சொல்லுகிறேன்."

"இராமேச்சுரத்தில் அவர் அறிவொளி அடிகளைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்"

"அதற்காகத்தானே அவனை அங்கு நீ அனுப்பினாய்?"

"ஆமாம், அறிவொளி அடிகள் என்ன செய்தி கூறியனுப்பி இருக்கிறார் தெரியுமா?"

"உடனே உன்னை அழைத்துக் கொண்டு வரச்சொல்லி அனுப்பியிருப்பார்!"

"அதுதான் இல்லை! அஞ்சலையை வஞ்சியிலேயே இருக்கச் சொல்—இப்பொழுது இங்கு வரவேண்டாம் என்று கூறியனுப்பியிருக்கிறார்!"

"உன்மீது அவருக்குக் கொஞ்சம் கோபம் போலிருக்கிறது."

"கோபம் என்மீது அல்ல—உம் மீது!"

"அப்படியானால், இளந்திரையன் அவரிடம் என்னைப் பற்றி தவறாகவே சொல்லியிருக்கிறான் என்று தெரிகிறது!"

"இளந்திரையன் கூறித்தான் உம்மைப்பற்றி அடிகள் தெரிந்து கொள்ள வேண்டுமா? பராக்கிரம பாகுவின் சேனைகள் சேரநாட்டில் இறங்க அனுமதித்திருக்கிறார் அல்லவா; தங்கள் தந்தையார்—அந்தச் செயல் மிகவும் ஆபத்தானது என்பது அடிகளின் கருத்து! இன்று தங்கள் உதவியோடு பராக்கிரமபாகு பாண்டிய நாட்டைத் தாக்கிப் பிடிப்பார். நாளை சோழநாட்டின் மீது பாய்வார். சோழ பாண்டிய நாடுகளில் தம் கொடியைப் பறக்கவிட்ட பிறகு, சேர நாட்டை ஏன் விட்டுவைக்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றும்! சோழ பாண்டிய நாடுகளில் மணிமகுடங்களைப் பறித்துக்கொண்ட இலங்கை அரசரின் பலம் அப்பொழுது பலமடங்கு அதிகமாகிவிட்டிருக்கும்! நன்றி மறப்பது நன்று அன்று என்ற பொன்மொழி எந்நேரத்திலும் மனிதன் கவனத்திற்கு வரவேண்டுமா, அந்நேரத்தில் அவன் நினைவிற்கு வராமல் போய்விடும்! மலைகளையே மண்டியிடச் செய்துவிட்டோம்—இது என்ன சுண்டைக்காய் என்ற அகங்காரத்தின் ஓங்கார கூச்சலுக்கு அவன் அடிமையாகி, உதவி செய்தவனின் ஊரின் மீதே படையை ஏவுவான்! இன்று பராக்கிரமபாகு நல்லவராகக்கூட இருக்கலாம்! ஆனால் சோழ, பாண்டிய நாடுகள் அவர் ஆட்சியின் கீழ் வந்துவிட்ட பிறகு முன்னர் குறிப்பிட்ட அந்த மனநிலையை அவர் அடைவார்—நிச்சயம் அடைவார்! இது ஆரூடம் அல்ல, ஆதிகாலம் தொட்டு வரலாறு சொல்லும் உண்மை! வஞ்சகன் ஒருவனை வளர்த்துவிடுவானேன்—அவனால் வந்த தலை ஆபத்து என்று பிறகு தலைமேல் கையை வைத்து இடிவானேன்? குலசேகர பாண்டியரைத் தாங்கள் கைது செய்து, இலங்கை அரசரிடம் ஒப்புவித்தது இருக்கிறதே, அது தமிழ் நிலத்திற்குத் தாங்கள் செய்த மாபெரும் துரோகமாகும்! தமிழ் நிலத்தில் மூன்று பெரும் அரசுகள் உள்ளன! அந்த மூன்று அரசுகளும் ஒன்றை ஒன்று பகைத்துக் கொண்டும், தாக்கிக் கொண்டும், ஒன்றின் அழிவை மற்றொன்று எதிர்பார்த்துக் கொண்டும் இருக்கின்றன! இது கவலைப்படக் கூடிய செய்தி!

ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பிமார்கள் மூவர் இருக்கிறார்கள்! ஒருவரை ஒருவர் பழித்து இழித்துப் பேசியும், சண்டை சச்சரவுகளில் மூழ்கியும் இருக்கிறார்கள். ஒற்றுமையில்லாத அக்குடும்பத்தின் சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற வஞ்சக எண்ணம்! அண்டை வீட்டுக்காரனுக்கு உண்

டாகிறது! சூழ்ச்சிகள் செய்கிறான் சண்டைக்கும் நிற்கிறான்! அந்த நேரத்தில் தங்களுக்குள் இருக்கும் மாச்சரியத்தையும் மனக் கசப்பையும் மறந்துவிட்டுச் சகோதரர்கள் மூவரும் ஒன்றாக நின்று, மாற்றானை எதிர்த்துத் தாக்கினால்தானே குடும்பத்தின் சொத்தும் புகழும் நிலைக்கும்? அந்தக் குடும்பந்தான் தமிழ் நிலம்! சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தாம், அந்த மூன்று சகோதரர்கள்! அந்நியன் ஒருவன் படை எடுத்து வரும்போது, நமக்குள் இருக்கும் பேதங்களையும் பிளவுகளையும் மறந்துவிட்டுக் கூட்டாகச் சேர்ந்து, பொதுப் பகைவனை எதிர்க்க வேண்டும்!......"


## வாய்வு சூரணம்'

**(Stomach Powder)**

மலச்சிக்கல் — மலக்கட்டு — உஷ்ண வாய்வு—பித்த வாய்வு—இடுப்புவாய்வு—இடுப்பு, கைகால் பிடிப்பு மூட்டுகள் வலி —அசரிக்கை—செரியாமை—வயிற்றுவலி முதலான வாய்வுகளை நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும் திரேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்தது. (பத்தியமில்லை.)

**160 கிராம் டின் ரூ 3—50**

**கக்குவான் மருந்து**

**(WHOOPING - COUGH)**

குழந்தைகளுக்கு வரும் தொற்று நோய், முதல் நாளிலேயே கக்குவான் கிருமிகளையும் சளி கோழையையும், வெளிப்படுத்தி நோயை கட்டுப்படுத்தி விரைவில் குணப்படுத்தவல்லது.

.புட்டி ரூ. 2—00

தேவைக்கு எழுதவும்:

**S. V. R. சன்ஸ் R. I. M. P.**

வாய்வு சூரணம் டிப்போ
தம்மண்ண செட்டியார் ரோடு
அரிசிப்பாளையம், சேலம்-9.

நேரில்பெற கிடைக்குமிடங்கள்:

**தேஜ்பால் & கோ.,**
91, நைனியப்பநாய்க்கன் தெருவு,
சென்னை-3.

**இளங்கோ கிளினிக்**
நெல்லித்தோப்பு,
வில்லியனூர் ரோடு, பாண்டிச்சேரி-5.

**சொக்கஞதம் செட்டியார்,**
நாட்டு மருந்துக்கடை
திருப்பாபுலியூர், கடலூர் N. T.

**ராஜா மெடிகல் ஹால்**
31, தர்மராஜா கோவில் தெரு,
பெங்களூர்.1 (கண்ட்)

**E. வல்லாராம்நாடார் & சன்ஸ்**
188-A, தாராவி ரோடு,
பம்பாய்-17.


"சொல்லிச் சொல்லி புளித்துப் போன ஒரு கருத்தை, இப்படி மூச்சுவிடாமல் நீ கூறுவதைக் கேட்டால், எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது, அஞ்சலை!"

"சிரியுங்கள்! நன்றாகச் சிரியுங்கள்! வேண்டாம் என்று நான் கூறவில்லை! பாண்டிய மன்னர் தங்களுக்கு என்ன கேடு செய்தார்—அவருக்கு நீங்கள் இப்படித் துரோகம் செய்ய?"

"பாண்டியன் சிவல்லபனும் அவன் மகன் குலசேகரனும், இந்தச் சேரநாட்டின் பரம விரோதிகள்! உனக்கு அது தெரியாததினால் தான் உபதேசம் செய்ய ஆரம்பித்துவிட்டாய்! திருவாங்கூர் அரசன் வீரரவிவர்மனைப் பற்றி நீ கேள்விப் பட்டிருக்கிறாயா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன்! பாண்டிய நாட்டிற்குத் திறை செலுத்தும் நாடல்லவா திருவாங்கூர்.

"அந்தத் திருவாங்கூர் சம்பந்தமாகத்தான், பாண்டிய நாட்டிற்கும் சேர நாட்டிற்கும் பகைமை மூண்டது! இன்று நேற்று அல்ல—நான் குழந்தையாக இருந்தபோது! சில ஆண்டுகளுக்கு முன்பு, திருநெல்வேலியில் ஒரு மணிமுடியும் மதுரையில் மற்றொரு மணிமுடியுமாக எப்படி பாண்டிய நாடு இரண்டாக இருந்ததோ — அதேபோல சேர நாடும் இரண்டாக, திருவாங்கூரைத் தலைநகரமாகக் கொண்டு வீரரவிவர்மனும் வஞ்சியைத் தலைநகராகக்கொண்டு என் தந்தையும் ஆண்டு வந்தனர்! இருவரும் தாயத்தினராவர்! வஞ்சியைத் தலைநகராகக்கொண்ட சேர நாடு நில அளவில் மிகவும் பெரியது! திருவாங்கூரோ சுண்டைக்காய் பெரியது! ரவிவர்மன் வஞ்சியையும் கைப்பற்றி, பரந்த சேர நிலத்தின் பார்த்திபனாகத் திட்டமிட்டான்! அதற்காக அவன் செய்த தீவிர ஏற்பாடுகளில் ஒன்று பாண்டியன் சிவல்லபனின் உதவியை நாடியதாகும்! அப்பொழுது பெரும் பஞ்சத்தால் சிதைந்திருந்த சேரநாடு, எதிரியின் படையெடுப்பைத் தாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை! ரவிவர்மனும் பாண்டியனும் கூட்டாகச் சேர்ந்து தாக்கினால், வஞ்சியின் வீழ்ச்சி நிச்சயம்! என் தந்தை கலங்கினார்! செய்தியை அறிந்த இலங்கை அரசர், உதவிப்படை அனுப்ப முன்வந்தார்! போர் மூண்டது! திருவாங்கூர் வஞ்சியின் அடிமையாயிற்று! வலிய உதவியளித்து, வரவிருந்த ஆபத்தைத் தடுத்த பராக்கிரமபாகுவிற்கு, நன்றியின் அறிகுறியாக திருவாங்கூரை என் தந்தை தந்துவிட்டார்! பராக்கிரமபாகு ரவிவர்மனை மன்னித்து, மறுபடியும் மன்னனாக்கி, தமக்குத் திறை செலுத்தி வரும்படிச் செய்தார்! பாண்டியனுக்கு அது பிடிக்கவில்லை! நம் உதவியைப் பெற்றவன், கடைசியில் இலங்கை அரசனின் தாள் பணிந்துவிட்டானே என்ற ஆத்திரம் அவனுக்கு. ஆகவே திருவாங்கூர்மீது பாய்ந்தான் — வெற்றியும் பெற்றான்! ஆபத்தான நேரத்தில் சேரநாட்டிற்கு உதவி செய்த பராக்கிரமபாகுவிற்கு ஒரு அவமானம் என்றால் — அது நமக்கு நேர்ந்த அவமானமாகக் கருதவேண்டியது தானே, நன்றி உள்ளோருக்கு அழகு! பராக்கிரமபாகுவின் இரு படைத் தலைவர்களின் தலைகளை வெட்டி, மக்கள் பார்த்துச் சிரிக்கும் விதத்திலே, மதுரைக் கோட்டை வாயிலில் வைக்கப்பட்டன — குலசேகர பாண்டியனால்! அப்படி வைக்கப்பட்ட தலைகள் அங்கேயே இன்னமும் இருக்கின்றனவாம்! ஏன், நீயும் அவற்றைப் பார்த்திருக்கலாமே?"

"ஆமாம், பார்த்திருக்கிறேன்!"

"பார்த்திருக்கிறாய் அல்லவா! இன்னும் சில தினங்களில் என்னோடு உன்னையும் இலங்கைக்கு அழைத்துச் செல்கிறேன் — அப்பொழுது அங்கே கோட்டை வாயிலில் உன்னை வரவேற்கப்போகிறது —குலசேகரனின் தலை!"

"ஐயோ, அதைக் கேட்டாலே என் உள்ளம் நடுங்குகிறதே! இளவரசே! பாண்டியர் தங்களுக்குப் பெரும் தொல்லை தந்திருக்கிறார்! புரிந்துகொண்டேன்! அவர் எனக்குச்செய்த கொடுமை இருக்கிறதே —வாள் ஏந்தி நானே அவர் தலையை வெட்டிச் சாய்க்கவேண்டிய அளவு, அவ்வளவு பெரியது!"

"உன் அண்ணன் பொன்னையாவைக் கயிற்றில் தொங்கவிட்ட காதகன் அல்லவோ, அவன்?"

"ஆமாம்!"

"அஞ்சலை! உன் அண்ணனின் கல்லறையை மனக்கண்முன் ஒரு கணம் கொண்டுவந்து நிறுத்து! கருணை பிறக்கிறதா அஞ்சலை, அந்தக் கயவன்மீது உனக்கு?"

"ஆமாம் இளவரசே, கருணை பிறக்கிறது எனக்கு! கல்லறை நினைவிற்கு வரும்போது உண்டாகும் ஆத்திரத்தை, மின்னல்போல் தோன்றி மறையும் புத்தபிரானின் கருணை முகம், அன்பாக மாற்றிவிடுகிறது! இன்னா செய்தாருக்கும் நன்மையே செய் என்ற வள்ளுவரின் அமுதவாக்கு, அந்த அன்பை அதிகமாக்கி, உள்ள உறுதியை உண்டாக்குகிறது!"

"கொடுமை செய்தவனை அணு அணுவாகக் கொல்லவேண்டாமா? சித்திரவதை செய்து அவனுடலைக் காக்கை கழுகுகளுக்குப் போட வேண்டாமா?

"வேண்டாம் என்கிறது தமிழ் மறை!"

"வேண்டும் என்கிறது, என் மற நெஞ்சம்! என் உளளம் என்ன கட்டளையிடுகிறதோ, அதை நிறைவேற்றியே தீருவேன்! எவ்வளவு பெரியதடை குறுக்கிட்டாலும், எவர் எதிர்ப்பினும் எள்ளளவும் நான் பொருட்படுத்த மாட்டேன்! கனகசேனன் முன் வைத்த காலைப் பின்வைக்கமாட்டான்! என்னை முரடன் என்று நினைத்துக்கொண்டாலும் நினைததுக்கொள்! மூர்க்கன் என்றோ முட்டாள் என்றோ பழிததாலும் பழித்துக் கொள்! குலசேகரன் எனது எதிரி! அவனது இரத்தம் கீழே கொட்டப்பட்டால்தான் — அவனைச் சித்திரவதை செய்து, உடலைச் சின்னாபின்னமாக்கினால்தான்—என் மனங்குளிரும்! என்று அவன் ஆத்திரத்தோடு பேசினான்.

அவள் கண்கள் கலங்கின. இரத்த வெறிபிடித்து அலைகிறீர்! என்று அவள் மெல்லக் கூறினாள்.

"ஆமாம் இரத்த வெறிபிடித்துத் தான் அலைகிறேன்—அதை ஒத்துக் கொள்வதில் எனக்கொன்றும் வெட்கமில்லை! அவ்வையாகவே நீ மாறி ஆயிரம் உபதேசங்கள் செய்தாலும், என் இரததவெறியைத் தணியச் செய்ய உன்னால் முடியாது அஞ்சலை முடியாது!"

"குலசேகரனின் இரத்தத்திற்குப் பதில் என் இரத்தத்தை தருகிறேன்! அவர் உடலுககுப் பதில என் உடலைப் பிளந்து உமது பாதங்களில் வைக்கிறேன்! உயிரோடு இருக்கும் என்னால்தான் உமது உள்ளத்தை மாற்ற முடியவில்லை என்றால், அஞ்சலையின் பிணத்திற்குக்கூடவா அந்தச் சக்தியில்லாமல் போய்விடும்! என்று சொல்லிக்கொண்டே திடீரென்று அவன் உரையிலிருந்த வாளை வெளியே இழுத்தெடுத்தாள்.

"அஞ்சலை! அஞ்சலை! அவசரப் படாதே!" என்று பதைபதைப்போடு கூறிக்கொண்டே அவன் கட்டிலைவிட்டெழுந்து அவளது கரங்களைப் பிடித்துக்கொண்டான்.

"என்னைத் தடுக்காதீர்கள்!"

"சொல்வதைக் கேள் அஞ்சலை!"

"அஞ்சலையின் பிணத்தினிடம் சொல்லுங்கள் — அது கேட்கும் உம் பேச்சை! விடுங்கள் என் கையை!" என்று அவள் ஆத்திரத்தோடு திமிறினாள்.



"அஞ்சலை! நான் குலசேகரனைக் காப்பாற்றுகிறேன் — போதுமா?"

"இதைக் கேட்டு நான் ஏமாந்துவிடுவேன் என்று நம்புகிறீர்களா?"

"சத்தியமாகச் சொல்கிறேன்! இன்றிரவு பாரக்கிரமபாகுவின் சிறையிலிருந்து குலசேகரனுக்கு விடுதலை!"

"இதை நம்ப நான் ஏமாளி அல்லேன்!"

"வளைக்க முடியாத கெட்டியான இரும்பை எபபடிக் கொல்லன் உலைக்களத்தில் பழுக்கக் காய்ச்சி அடித்து தன் விருப்பம் போன்ற உருவத்தை அதற்கு அளிக்கிறானோ—அப்படியே நீயும் இந்த ஐந்து நாட்களில் என் இருமபு மனததை இளகச் செய்து உன் எண்ணம் போலச் செயலாற்றச் செய்துவிட்டாய்! அஞ்சலை இன்றிரவே குலசேகரனைச் சிறையினின்றும் இரகசியமாகத் தூக்கிக்கொண்டு வந்துவிட இன்று பிற்பகல் ஏற்பாடு செய்துவிட்டேன். அப்படி நான் ஏற்பாடு செய்தபோது இளந்திரையனும் உடன் இருந்தான்! ஏன் இப்படி பார்க்கிறாய்? என் சொல்லை நம்பவில்லையா? இளந்திரையனை அழைக்கிறேன். உண்மையை அவன் சொல்லியபிறகாவது நம்புவாய் அல்லவா?"

"உண்மையாகவா?" என்று கண்களில் கண்ணீர் உருண்டோட அஞ்சலை கேட்டாள்.

அவள் கையிலிருந்த வாள் நழுவித் தரையில் விழுந்து கணீர் என்ற சப்தத்தை உண்டாக்கிற்று.

கண்களை மூடிக்கொண்டு 'உண்மையாகவா! உண்மையாகவா?" என்று அவள் தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டாள.

அன்றிரவு சிறையில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த குலசேகரன் யாரோ தன் மீது படுவதை உணர்ந்து திடுக்கிட்டு விழித்துக்கொண்டான்.

நான்கைந்து பேர் தன்னைச் சுற்றிலும் இருப்பதைக் கண்டதும் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

'நீங்கள்யார்?' என்று அதட்டிக்கேட்டுக்கொண்டே அவன் எழுந்து நின்றான்.

"பேசாதே!" என்று ஒருவன் சொல்லியதைப்போல எழுநது நின்றவனின் வாய் அருகே கையை எடுத்து வந்தான்! அந்த கரத்தில் மயக்கமருந்து இருந்தது—பாவம், குலசேகரனுக்குத் தெரியாது!

மற்றொருவன் தன் கால்களைக் கட்டுவதை அவன் உணர்ந்தான்—மறு நொடியே சுய நினைவு அற்று, மரம்போல் சாய்ந்தான்!

அவசர அவசரமாக அவன் கல் கைகளைக் கட்டினர், கனகசேனனின் ஆட்கள்!

சிறையில் அவர்கள் அந்த வேலையில் ஈடுபட்டிருந்தபோது—அந்தப் புரத்தில தனியே தமிழ் வெண்ணிலாவைத் திருமேனி தட்டியெழுப்பிக் கொண்டிருந்தாள்.

[வளரும்]

# காஞ்சி பொங்கல் மலர்


## கருத்துக்கு நல்விருந்து

நெஞ்சை அள்ளும்
சிறுகதைகள்
தெளிவளிக்கும்
கட்டுரைகள்
இன்சுவை மிகு
கவிதைகள்

பொங்கல் மலர்

முல்லை மணம்
முக்கனிச் சாறு
முத்துப்பேழை

கருத்துச் சோலையில் உலவிட!
முத்தமிழ்ச் சுவை பருகிட!



அளித்திடும்

**படைப்புகள்**
நிறைந்த
அறிவுப் பெட்டகம்

## காஞ்சி
## பொங்கல் மலர்

தேவை குறித்து இன்றே தெரிவித்திட வேண்டுகிறோம்

**விலை 1--50**


சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.